# மக்கள் விசாரணை ®

லஞ்ச ஊழல் விழிப்புணர்வு

மக்களின் மனக்குமுறல்

ஆண்டு-5 இதழ்-11 ஏப்ரல்-2017 மாத இதழ் விலை ₹ 10/-

makkalvisaranai@facebook twitter



# திராவிடத்தை அசைக்கப்போகும் பெண்கள்


VISHNU MAYA
PRODUCTION
Mouriyan Arumugam
Films
72KM
COMING SOON
காக்களூர் த.துரைபாபு
பெருமையுடன் வழங்கும்
Writen & Direction
Mouriyan Arumugam
Sanathan S. Krishna, Wilsy, Gopi Krish, Silva, Manogar, Ezhil Fernandas
Ganan Siva, Oviya Omapathy, Neelan, Jonhson, DGLOG Studios
Producer
Kakkalur T. Duraibabu

# ஜனநாயக வாதிகளே உஷார்!

## சிறப்புத் தலையங்கம்

டிசம்பர் 22 அன்று ராம மோகன ராவ் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டு, கிரிஜா வைத்யநாதன் தலைமைச் செயலாளராக நியமிக்கப்பட்டார். டிசம்பர் 27 அன்று பத்திரிகை யாளர்களைச் சந்தித்த ராமமோகன ராவ், தன் மீதான குற்றச்சாட்டுகளையும் வெளியான தகவல்களையும் மறுத்தார்.

சோதனைக்கான ஆணையில் தனது பெயர் இல்லை என்று தொடங்கிய அவரது விளக்கம் தன் அலுவலகத்தில் நடந்த சோதனை, அரசியலமைப்பின்மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்று விமர்சனத்தில் முடிந்தது. இதற்குப் பதிலளித்த வருமான வரித்துறை "சட்ட விதிமுறைகளைப் பின்பற்றியே சோதனைகளை நடத்தியிருக்கிறோம்" என்று தெரிவித்தது. ஆற்று மணல் ஒப்பந்ததாரர் சேகர் ரெட்டி மற்றும் அவரது நண்பர் சீனிவாசலு வீடுகளில் நடந்த வருமான வரிச் சோதனைகளில் கிடைத்த ஆவணங்களின் அடிப்படையிலேயே தலைமைச் செயலாளரின் இல்லத்திலும் அலுவலகத்திலும் சோதனை நடத்தப்பட்டதாகவும் தொடர்ந்து தகவல்கள் வெளியாயின.

தமிழ்நாட்டின் தலைமைச் செயலாளராக பி.ராம மோகன ராவ் பதவி வகித்தபோது, 2016, டிசம்பர் 21 அன்று தலைமைச் செயலகத்திலுள்ள அவரது அறையிலும், அவரது வீட்டிலும் சோதனை நடத்தியது வருமான வரித் துறை. பணமதிப்பு நீக்கத்துக்குப் பிறகு, ரிசர்வ் வங்கியால் வெளியிடப்பட்ட 30 லட்சம் மதிப்புள்ள புதிய ரூபாய் நோட்டுகள், ஐந்து கிலோ தங்கம், கணக்கில் காட்டப்படாத ஐந்து கோடிப் பணம் ஆகியவை கைப்பற்றப்பட்டதாகத் தகவல்கள் வெளியாயின.

ஒரு மாநிலத்தின் தலைமைச் செயலகத்தில், அதுவும் துணை ராணுவப் படைகளின் துணையோடு நடத்தப்பட்ட, முன்னுதாரணமற்ற இந்தச் சோதனை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. தமிழக அரசோ, ஆளும் கட்சியோ இதற்கு எதிர்வினையாற்ற வில்லை என்றாலும், மாநிலங்கள் உரிமை மீதான தாக்குதல் என்று குறிப்பிட்டார் வங்க முதல்வர் மம்தா பானர்ஜி.

ராம மோகன ராவ் பற்றி மக்களிடைய கடும் சந்தேகங்கள் ஏற்பட்ட நிலையில், தமிழக அரசோ இதுகுறித்து எந்த விளக்கமும் அளிக்கவில்லை. மாறாக, அவருக்கு எந்தப் பொறுப்பும் அளிக்காமல் காத்திருப்போர் பட்டியலில் வைத்திருந்தது. இந்நிலையில், மார்ச் 30 அன்று தொழில்முனைவோர் வளர்ச்சி நிறுவன இயக்குநராக நியமிக்கப் பட்டிருக்கிறார் பி.ராம மோகன ராவ்.

எதிர்க் கட்சிகளைப் போலவே மக்களிடத்திலும் இது கடும் அதிர்ச்சியை உருவாக்கியிருக்கிறது. "யாரையோ மிரட்டி எதையோ சாதிக்க டெல்லியால் நடத்தப்பட்ட பேரச் சோதனையா இது? உள்ளபடி ராம மோகன ராவ் குற்றமிழைத்தவர் என்றால், மீண்டும் எப்படி அவர் பதவியில் அமர்த்தப்படுகிறார்? அவர் சந்தேகத்துக்குரியவர் இல்லை என்றால், எந்த முகாந்திரத்தில் இந்தச் சோதனை நடத்தப்பட்டது, அதன் முடிவு என்ன?" என்று மக்கள் எழுப்பும் கேள்விகள் அர்த்தமற்றவை அல்ல. தொடர்ச்சியாக அ.தி.மு.க. அரசின் ஊழல்களும் பதுக்கல்களும் வெட்ட வெளிச்சமாக இருப்பதால் தொடர்ந்து வருமான வரித் துறையின் வளையத்திற்குள் சிக்கியிருப்பது வெட்கக் கேடாக இருக்கிறது.

இந்த விவகாரத்தில் மக்களின் சந்தேகத்தைக் களைய வேண்டிய தார்மிகப் பொறுப்பு மத்திய, மாநில அரசுகளுக்கு இருக்கிறது. அதிலிருந்து அவை தப்பிவிட முடியாது!

இது ஊழல் வாதிகளுக்கும் லஞ்ச லாவண்ய கருங்காலிகளுக்கும் இச்செயல் துணை போகும் மேதாவி தூய்மை தேசம் என்ற அறிவிப்புகள் வெறும் கனவுதான்.

– ஆசிரியர்




# குடிக்க தண்ணி இல்லை? டாஸ்மாக்கில் பஞ்சமில்லை!

2016 மே வரை தமிழகத்தில் செயல் பட்டுக்கொண்டிருந்ததமிழ்நாடு அரசு மதுக் கடைகளின் எண்ணிக்கை 6,672. கடந்த சட்டப் பேரவைத் தேர்தலில் அதிமுக வெற்றி பெற்ற பின்பு, முதல் கட்டமாக 500 கடைகள் மூடப்பட்டன. பின்பு, பழனிசாமி முதல்வராகப் பொறுப்பேற்ற பின்பு 500 கடைகள் மூடப்பட்டன.

ஆக, இறுதியாக தமிழகத்தில் செயல்பட் டுக்கொண்டிருந்த டாஸ்மாக் கடைகளின் எண்ணிக்கை 5,672. இவற்றின் மூலம் தினசரி ரூ. 65 கோடி அளவுக்கு அரசுக்கு வருவாய் கிடைத்துக்கொண்டிருந்தது. உச்ச நீதிமன்றத் தின் உத்தரவால் தற்காலிகமாக சுமார் ரூ.25 கோடி குறையும் என்று சொல்லப்படுகிறது. குடியால் நேரும் பொரு ளிழப்பை மதிப் பிட்டால் இது ஒரு பொருட்டே அல்ல.

கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது அது. டாஸ்மாக் கடைகளின் இரும்புக் கதவு களைத் தடதடவென இழுத்துப் பூட்டிக் கொண்டிருந்தார்கள், தமிழ்நாடு அரசு மதுபானக் கடை ஊழியர்கள். சம்பளம் வாங்கிய கையோடு டாஸ்மாக்குக்கு வந்திருந் தவர்கள், குறிப்பாகக் குடிநோயாளிகள் திகைத்துப்போனார்கள். வேறு வழியின்றி மது அருந்தாமல் வீடு திரும்பினார்கள். நீண்ட காலத்துக்குப் பிறகு, சம்பளம் முழுமையாக வீடு சென்றடைந்தது. மனைவி, பெற்றோர், குழந்தைகள் முகத்தில் அவ்வளவு ஆச்சரியம், பூரிப்பு, மனநிறைவு.

ஆம், உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின்படி, தமிழகத்தில் தேசிய மாநில நெடுஞ்சாலையை ஒட்டி 500 மீட்டருக்குள் இருந்த அரசு மதுக் கடைகள் உடனடியாக மூடப்பட்டுவிட்டன.

சாமானிய மக்களை, ஏழைகளை, உழைக் கும் பாட்டாளி வர்க்கத்தினரை மதுவின் அகோரப்பிடியிலிருந்து மீட்கும் முயற்சியில், உச்ச நீதிமன்றத்தின் மூலமாகக் குறிப்பிடத் தக்க ஒரு வெற்றியைப் பெற்றிருக்கிறது பாமக.

நெடுஞ்சாலையில் அமைந்துள்ள மதுக் கடைகளை அகற்ற வேண்டும் என்று கோரி, அக்கட்சியைச் சேர்ந்த வழக்கறிஞரும் நீதிப் பேரவையின்தலைவருமானபாலுதொடர்ந்த வழக்கு, பல்வேறு கட்டங்களுக்குப் பிறகு, இந்த நடவடிக்கைக்கு வழிகோலியிருக்கிறது. "இதற்கான முழுப் பெருமையும் பாமக நிறுவனர் ராமதாஸ், அன்புமணி ராமதாஸ், வழக்கறிஞர்கள் தனஞ்செயன், ஜோதிமணி இவர்களையே சாரும்" என்று வழக்கறிஞர் பாலு சொல்வது மிகையானது அல்ல.

இந்த வழக்கில் தமிழக அரசு, மக்கள் வசிப்பிடங்களிலிருந்து மதுக் கடைகள் 500 மீட்டர் தள்ளியிருக்க வேண்டும் என்கிற விதிமுறையை 100 மீட்டராகக் குறைக்க நீதிமன்றத்தில் வலியுறுத்தத் திட்டமிட்டுள்ளது என்று 'மெல்லத் தமிழன் இனி' தொடரில் எழுதியிருந்தேன். சரியாக அதே வார்த்தையை உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு முன்வைத்தது.

நல்ல வேளையாக, உச்ச நீதிமன்றம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக, 20,000-க்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட பகுதிகளில் மதுக் கடைகளை நடத்துவதற்கான கட்டுப்பாட்டை நெடுஞ் சாலையில் இருந்து 500 மீட்டரிலிருந்து 220 மீட்டராகத் தளர்த்தியுள்ளது. 20,000-க்கும் அதிகமாக மக்கள்தொகை கொண்ட பகுதிகளில் 500 மீட்டருக்கும் அப்பால்தான் மதுக் கடை செயல்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது.

இதன்படி பார்த்தால், இன்றைய நிலவரப்படி நெடுஞ்சாலைகளையொட்டி இருப்பதாக தமிழக அரசு குறிப்பிட்டுள்ள 3,321 கடைகளையும் முழுமையாக மூடியதாக எடுத்துக்கொள்ள இயலாது. சுமார் 2,000 தொடங்கி 2,500 கடைகளை மட்டுமே தமிழக அரசு மூடியிருக்கும். அதேசமயம், விதிமுறைகளின் ஓட்டைகளில் புகுந்து தற்போது மூடப்பட்ட கடைகளுக்கு மாற்று இடம் தேடி அலைந்துகொண்டிருக்கிறார்கள் அதிகாரிகள். இவர்கள் தேர்ந்தெடுக்கும் இடங்கள் பல ஊர்களில் கடும் எதிர்ப்புக்கு ஆளாகி வருகின்றன. அப்படி அவர்கள் மாற்று இடங்களில் மதுக் கடைகளை நிறுவ முயன்றால், நம்மிடம் இருக்கும் ஒரே ஆயுதம் கிராம சபைத் தீர்மானம் (பின்னர் இதை விரிவாகப் பார்க்கலாம்). அதே சமயம், மதுக் கடைகளை மூடத் தவறினால் போராட்டம் நடத்துவோம் என்று பாமக அறிவித்திருக்கிறது.

உண்மையில், தமிழகத்தின் சாமானிய மக்களுக்குக் கிடைத்திருக்கும் சமூக, பொருளாதார விடுதலையின் முக்கியமான தொடக்கப் புள்ளிகளில் ஒன்று இது. தமிழகத்தின் பெருவாரியான குடிநோயாளிகளுக்கு உடல், மன வேதனையிலிருந்து மிக விரைவில் விடுதலை கிடைக்கப்போகிறது.




ஆனால், இந்த துவக்க வெற்றி ஓரிரு நாளிலோ அல்லது ஓரிரு ஆண்டுகளிலோ கிடைத்துவிடவில்லை. ஜனநாயகத்தின் பல்வேறு அமைப்புகளும் சேர்ந்து நடத்திய கூட்டுப் போராட்டம் இது. குடிநோய்க்கு எதிராகத் தொடர்ந்து 'மக்கள் விசாரணை' மேற்கொண்டுவரும் தொடர் பிரச்சாரங்களையும் இங்கு குறிப்பிடலாம்.

அதேசமயம், பாமக அரசியல்ரீதியாகவும் சட்டரீதியாகவும் நடத்திய இந்த இரட்டைப் போராட்டம், ஒருவகையில் பல பிரச்சினைகளுக்கு நாம் கைக்கொள்ளக் கூடிய ஒரு முன்னுதாரணம். எப்படி நடத்தப்பட்டது இது?

**- வடிவேல்**

**அருள்மிகு செண்பகவல்லி உடனுறை காரணீஸ்வரர் திருக்கோயில்! கோவில் நகரமாக விளங்கும் காக்கலூரில் புதிதாக புதுப்பிக்கப்ட்ட அழகிய திருக்கோயில் ஆகும்.**



# அற்புத ஆலயங்களின் ஸ்தல வரலாறு!

ஆன்மிக தொடர்-2

கருணையே வடிவமான சிவபெருமான் பால் நினைந்து ஊட்டும் தாயை விட நம்மீது நூறு மடங்கு அனபு கொண்டு அம்மையுடன் எழுந்தருளி அருள்பாலிக்கும் திருத்தலம் இது.

நம்மைப் பெற்ற தாய், தந்தையரை தெய்வமாக அனுதினமும் வணங்க வேண்டும் என்ற தாரக மந்திரத்தை நமக்கு அறிவுறுத்திய மூலப் பொருளான செல்வ விநாயகரும், அகில உலகம் முழுவதும் வலம் வந்து அம்மையப்பரை தரிசித்து ஸ்ரீ முருகப் பெருமான் வள்ளி தெய்வானையுடன் தோன்றி அருள்புரியும் திருச்சன்னதிகளை இங்கு தரிசிக்கலாம்.

பொதுவாக மூத்த பிள்ளை மீது தந்தையாருக்கும் இளைய பிள்ளை மீது தாயாருக்கும் பிரியம் அதிகமாக இருக்கும் என்பார்கள். முன்பு ஒரு சமயம் விநாயகப் பெருமான், தம்பி முருகன் மீது தாய், தந்தையும் புகார் செய்து வருந்தி நின்றார். தந்தையாரும் கணபதி ஏன் கலங்குகின்றாய் என்று கேட்க, அப்பா தம்பி என்னுடைய துதிக்கையை முழம் போட்டு பார்க்கிறான். இம்மாம் பெரிய கை என்று கேலி செய்கிறான் என்று புலம்புகிறார்.

அதற்குதந்தையாரும்முருகவேலைகூப்பிட்டு ஏன் அண்ணன் துதிக்கையை முழம் போட்டு பார்க்கிறாய் என்று வினவ, அப்பா நீங்கள் என் மீது கோபிக்காதீர்கள். அண்ணன் மட்டும் என்னுடைய ஆறுமுகத்திலும் உள்ள கண்களை எண்ணி என்னைப் பரிகாசம் செய்யலாமா? என்று சினுங்க சரி பரவாயில்லை உன் அண்ணன் தானே நீ, துதிக்கை முழம் போட்டு பார்ப்பதற்கும் அவன் உன் முகத்தில் கண்களை கணக்கு எடுத்ததற்கும் சரியாகிப் போய்விட்டது என்று பிள்ளைகள் இருவருக்கும் சமாதானம் கூறி தந்தை விநாயக ரையும், தாய் முருகவேலையும் பக்கத்தில் அமர்த்தி அனைத்து முத்தமிட்டதாகவும், ஒரே நேரத்தில் நால்வரும் சிரித்து மகிழ்ந்து எங்களைப் போல் நீங்களும் பிள்ளைகள் மீது பாசம் கொண்டு வாழ வேண்டும் என்று இதன்மூலம் நமக்கு வழிகாட்டுவதாக கருதுவோம்.



ஸ்ரீ செண்பகவள்ளி உடனுறை
ஸ்ரீ காரணீஸ்வரர் திருக்கோயில்
காக்களூர்

இத்திருக்கோவில் வந்து வழிபடும் அன்பர்கள் இல்லங்களில் பெரியோர்கள் மீது குழந்தைகள் மதிப்பும் மரியாதையுடன் நடந்து கொள்வதையும், பிள்ளைகள் மீது அன்பும் பாசமும் கொண்டவர்களாக வாழ்வார்கள் என்பதை அனுபவத்தில் உணரலாம்.

மற்றொரு நாள் காரணீஸ்வரரும், அம்மை செண்பகவல்லியுடன் கலியுகத்தில் அன்றாடம் நடைபெறும் சம்பவங்களைப் பற்றி பேசத் தொடங்கியபோது, அம்மா சொன்னார்கள் சுவாமி இத்தனை பக்தர்கள் வந்து நம்மை வணங்கி செல்கிறார்களே, இவர்கள் எல்லாம் கூட்டம் கூட்டமாக காசிக்கும் சென்ற தரிசித்தும் கங்கையில் புனித நீராடி பாவங்கள் நீங்கப்பெற்று நமது உறைவிடமான திருக்கயிலாயத்திற்கு வந்து விட்டால், இவ்வளவு பேர்களுக்கும் கையிலா யத்தில் இடம் கிடைக்குமா? என்று கேட்க, அதற்கு சுவாமியும் அன்புக்குரியவே, நாளை நாம் இருவரும் காசியிலுள்ள கங்கைப் படித்துறைக்கு செல்கிறோம், அங்குதான் நீ கேட்ட கேள்விக்கு தெளிவான பதில் கிடைக்கும் என்றார்.

அதன் பிரகாரம் சுவாமி ஒரு வயதான அடியார் வேடத்திலும், அம்மையும் ஒரு வயதான மாது வடிவத்திலும் வந்து கங்கை படித்துறையில் இறங்கி நிற்கிறார்கள். சுவாமி அப்போது சரேல் என்று கங்கை நதிக்குள் பாய்ந்து நீராடுகிறார். அதே நேரம் கங்கை வெள்ளமாக பிரவேசிக்க வெள்ளத்தில் சிக்கிக்கொண்டவராக காப்பாற் றுங்கள் காப்பாற்றுங்கள் என்று கையை உயரே தூக்கியபடி பரிதவிப்பது போல் நடிக்கிறார். அம்மாதும் உடனே அங்கே நீராடிக் கொண்டி ருந்த பக்தர்களை நோக்கி, ஐயன்மீர் யாராவது எனது கணவரை காப்பாற்றுங்கள், அவரை வெள்ளம் இழுத்து செல்வதற்கு உதவுங்கள்.

ஆனால் ஒரு விஷயம் ஒரு பாவமும் செய்யாதவர்கள் மட்டும் அவரை தொட்டு தூக்கி வாருங்கள். மற்றவர்கள் தூக்கினால் அவரோடு நீங்களும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுவீர்கள் என்று பலத்த குரலில் கூறினார். யாருமே பெரியவர் பக்கத்தில் செல்லவில்லை. காரணம் என்னவென்றால் ஒரு பாவமும் செய்யாதவர்கள் உலகத்தில் இல்லை யென்றும், தங்கள் தங்கள் மனதில் தாங்கள் செய்த பாவத்தை மனதில் நினைத்து பயந்து நின்றார்கள்.



காக்களூர்
**த. துரைபாபு**

அதே சமயம் ஒரு வாலிபன் வந்து சரேல் என்று கங்கையில் பாய்ந்து எழுந்தான். அனைவரும் கேட்கும் படியாக உரத்த குரலில் நான் செய்த பாவம் இந்த புனித கங்கையில் நீராடியதும் என்னை விட்டு போய்விட்டது.

நான் பாவங்களிலிருந்து விடுபட்டுவிட் டேன். நான் சென்று இந்த பெரியவரை காப்பாற்று வேன் என்று வெள்ளத்தில் குதித்து அவரை காப்பாற்றி கரையில் சேர்த்தான். ஜென்மாவில் செய்த பாவங்கள் அனைத்தும் கங்கையில் ஒரு முறை நீராடினால் தீர்ந்துவிடும் என்பது எல்லோ ருக்கும் தெரிந்த விஷயமே என்றாலும் அதில் நம்பிக்கை யாருக்குமே இல்லை! எங்கிருந்தோ வந்த அந்த இளைஞன் தன்னுடைய குருநாதர் உபதேசித்ததை முழுமையாக நம்பினான். அந்த நம்பிக்கைதான் அவன் கங்கையில் குதித்ததும், தெரிந்தும் தெரியாமலும் செய்த பாவங்கள் விலகிவிட்டது என்று பெரியவரை காப்பாற்ற வைத்தது. அடுத்த நிமிடம் கரையேறிய பெரிய வரும், மாதும் கூட்டத்திலிருந்து விலகி மீண்டும் சுய உருவில் தோன்றினார்கள்.

அப்போது சுவாமி சொன்னார் இவ்வளவு பெரிய மக்கள் கூட்டத்தில் நம்பிக்கை உள்ளவர் ஒரு ஆள்தான் இருக்கிறார் என்பதை பார்த்து விட்டாய் அல்லவா!

நீ முன்பு கூறியதுபோல் எவ்வளவு கூட்டம் கூடினாலும் முழு நம்பிக்கை உள்ள ஒரு சிலர்தான் நம் இடத்திற்கு வர முடியும். அதனாலே எல்லோ ரும் வர முடியாது என்பதை நீ இப்போது உணர்ந்திருக்கிறாய் என்றார். ஆமாம் சுவாமி, நம்மை வழிபடும் அடியவர்கள் தாங்கள் சிரசில் தாங்கி புண்ணியம் பெற்ற கங்கா நதியில் புனித நீராடினால் பாவங்கள் விலகும் என்பதை இதன்மூலம் அறியட்டும் என்று சுவாமியிடம் கூறினார்.

இந்த சம்பவத்தின் மூலமாக முழு நம்பிக்கை யும், திட ஞானியாக நாம் ஸ்ரீ காரணீஸ்வரரையும் ஸ்ரீ செண்பகவல்லியை வழிபடுவோம். வாழ்வில் சகல நன்மைகளும், செல்வங்களை பெறுவோம்.

– தொடரும்.



# திராவிடத்தை அசைக்கப்போகும் பெண்கள்



இடைத் தேர்தலை சந்திக்கும் ஆர்.கே. நகரில் பெண்களின் வாக்குகளே அதிகம். இதை வைத்துத்தான் அதிமுக அங்கு தொடர்ந்து ஜெயித்து வருகிறது. ஆனால் தற்போது ஜெயலலிதா மறைந்து விட்டதால் இந்த வாக்குகளைக் கவரப் போவது யார் என்ற பெரும் கேள்வி எழுந்துள்ளது.

ஜெயலலிதா இருந்தவரை ஆர்.கே.நகர் என்றில்லை, பொதுவாகவே தமிழகம் முழுவதும் பெண்களின் வாக்குகளை அதிமுக கவர்ந்து இழுத்து வந்தது கண்கூடு. ஆனால் தற்போது ஜெயலலிதா இல்லை. இதனால் பெண்களின் வாக்குகள் யாருக்குப் போகப் போகிறது என்பது பெரும் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

ஜெயலலிதா இல்லாத முதல் இடைத் தேர்தல் என்பதால் இனிமேல் பெண்களின் வாக்குகளை பெறப் போவது யார் என்ற புதிய எதிர்பார்ப்பும் எழுந்துள்ளது.

கடந்த ஜனவரி 5ம் தேதி வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட்டது. அதன்படி ஆர்.கே.நகர் தொகுதியில் ஆண்களைவிட பெண் வாக்காளர்களே அதிகம்.

1,34,307 ஆர்.கே நகரில் ஆண் வாக்காளர்கள் எண்ணிக்கை 1,28,305 ஆகும். பெண் வாக்காளர்கள் எண்ணிக்க 1,34,307 ஆகும். மூன்றாம் பாலினத்தவர் 109 பேர் ஆவர். மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 2,62,721 ஆகும்.

சசிகலா மீது பெண்கள் கொலை வெறியில் உள்ளனர். குறிப்பாக ஆர்.கே.நகர்





தொகுதி பெண்கள்தான் படு ஆத்திரத்தில் உள்ளனர். ஜெயலலிதா முழுமையாக நம்பியது சசிகலாவைத்தான். ஆனால் அவரோ, ஜெயலலிதாவின் கடைசிக்காலத்தை மர்மமானதாக மாற்றி விட்டாரே என்ற பெரும் ஆதங்கம் பெண்களிடம் உள்ளது.

சசிகலா மீது இன்னும் இங்குள்ள பெண்களுக்கு கோபம் குறையாமலேயே உள்ளது. எனவே நிச்சயம் சசிகலா கட்சியின் வேட்பாளருக்கு பெண்களின் ஆதரவு கிடைக்கும் என்று உறுதியாக கூற முடியாத நிலையே காணப்படுகிறது.

அதேசமயம், இங்குள்ள பெண்கள் மத்தியில் தீபாவுக்கு நல்ல ஆதரவு காணப்படுகிறது. குட்டி ஜெயலலிதாவாகவே அவரை பெண்கள் பார்க்கிறார்கள். எனவே ஆர்.கே.நகர் பெண்களின் ஆதரவு தீபாவுக்கு கணிசமாக கிடைக்க வாய்ப்புள்ளதாக கருதப்படுகிறது.

அதே நேரத்தில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வத்துக்கும் பெண்கள் மத்தியில் கணிசமான கிரேஸ் உள்ளது. அந்த அடிப்படையில் ஓ.பி.எஸ்ஸுக்கும் நிச்சயம் கணிசமான வாக்குகள் பெண்களிடமிருந்து கிடைக்கும் என்று கருதப்படுகிறது.

**திமுகவுக்கு எந்த அளவுக்கு பெண்களின் வாக்குகள் கிடைக்கும் என்று தெரியவில்லை. பெண் வேட்பாளரை நிறுத்தும் பட்சத்தில், அதற்காக சொற்ப வாக்குகள் கிடைக்கலாம். ஆனால் தீபா, ஓ.பி.எஸ்ஸே பாதிக்கும் மேலான வாக்குகளைப் பிரித்து விடுவார்கள் என்பதால் திமுகவுக்கு பெண் வாக்காளர்கள் பெரிய அளவில் வாக்களிப்பார்களா என்பது சந்தேகம்தான்.**

– மவுரியன்


வாழ்க தமிழ்! வளர்க அன்பு!!

# மக்கள் விசாரணை

Applied in NEWS PAPER ASSOCIATION OF INDIA

லஞ்ச ஊழல் விழிப்புணர்வு

ஆண்டு-5 ஏப்ரல்-2017 இதழ் - 11

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன் (பி) லிட்., சார்பாக
வெளியிடுபவர் ஆசிரியர்
**A. மவுரியன்,** B.A.,Dip. Journilisam,

• ஆசிரியர் குழு
**A. காதர் மொய்தீன், ஆ.தே. முருகையன், காசி. அரங்கநாதன்**

• உதவி ஆசிரியர்
காக்களூர் **த. துரைபாபு**

• துணை ஆசிரியர்கள்
**ஆர்.ஆர். சண்முகவேல், கே. ரமேஷ்குமார், M. தரணி. எஸ். சரவணன், பி. மாரிமுத்து, D. ரவி, V. அருணாச்சலம், வீ. வடிவேல், வீரஆறுமுகம், A. பாலசந்தர்,** காஞ்சிபுரம் **எஸ். கோபி,** காரைக் **சத்தியராஜ்**

• முதன்மை செய்தியாளர்கள்
**சமயசெல்வம்,** மதுரை **ராம்குமார், பிரகாஷ், பிரதீப்,** சேலம் **பாலகிருஷ்ணன், செந்தில்குமார், மனோஜ்குமார்,** கோவை **R. ஜெயா, K. ஷமீம் ஷகிலா, P. சாந்தா,** தென்சென்னை **பி.கே.தனஞ்செயன், அ.மு.ரமணாத்திரி, மார்கபந்து,** தி.மலை **சசிக்குமார்,** சென்னை **குமரேசன்,** ஈரோடு **யு. அக்ரம்கான், சுக்கூர்கான்,** திருவள்ளூர் **பா. சுப்பிரமணியன்,** திருநெல்வேலி **நாகராஜ்,** மூணாறு **மாரிமுத்து,** உளுந்தூர்பேட்டை **சுசீ ஈஸ்வர்,** தென்காசி **ராமசுப்பிரமணியன்,** ராஜபாளையம் **சிலம்பரசன்,** தர்மபுரி **செந்தில்,** தென்சென்னை **சத்தியராஜ்,** நாமக்கல்

• நிருபர்கள்
**எம். நிவேதிதா, இர்வின், கனகதுர்கா, ராஜேஷ் அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின்**

• சட்ட ஆலோசகர்கள்
**M. குணசீலன்,** B.Com.,M.L.,
**M. சுதாகர், B.Sc.,B.L.,**
(உயர்நீதிமன்றம், சென்னை.)

• புகைப்பட நிருபர் : **எம். சந்தோஷ்சிவன்**

• இதழ் வடிவமைப்பு : **AKS CREATIVE'S**

அலுவலகம் :
**மக்கள் விசாரணை**
நெ.21/12, 2-வது சந்து, நடராஜ் பில்டிங் முதல் மாடி,
ஜார்ஜ் டவுன், சென்னை - 600 001.
Email : writermouriyan@gmail.com www. makkalvisaranai.com
Information Contact : feedback@makkalvisaranai.com
Phone : 044 - 4354 2611, 93821 33334

Press & Registration of Book Act-in படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.



– சிறப்புக் கட்டுரை

# இளைஞர்களிடம் திறமைக்கு பஞ்சமா?

டெமோகிராபிக் டிவிடெண்ட் என்ற ஆங்கில வார்த்தை அனைத்து நாளிதழ்களி லும் முக்கியமாக இடம் பெற்று வருவது சமீபத்திய நாட்களில் அதிகம் பார்க்க முடிகிறது. அடுத்த சில பத்தாண்டுகளில் இந்திய பொருளா தாரத்தில் மிக சிறந்த நாடாக முன்னேற்றம் அடைய இந்த வார்த்தை மிகுந்த உபயோகமாக இருக்கும் பொருளாதார வல்லுநர்கள் கூறிவருகின்றனர்.

இந்த வார்த்தைக்கு விளக்கம் தேடிப் பார்க்கையில் மொத்த மக்கள் தொகையில் பணிக்குச் செல்லக்கூடிய வகையில் உள்ள மக்கள் அதிகமாக இருப்பதுதான் டெமோ கிராபிக் டிவிடெண்ட். அதாவது இளைஞர் களை அதிகம் கொண்ட நாடு என்று சுருங்க பொருள் கொள்ள முடியும்.

15 முதல் 64 வயது வரை கொண்ட மக்கள் இந்தியாவில் அதிகம் காணப்படுவதால் இந்தியா நிச்சயமாக மிகுந்த வளர்ச்சியடையும் என்று பல்வேறு ஆய்வுகள் கூறிவருகின்றன. 2020-ம் ஆண்டு இந்தியாவின் சராசரி வயது 29-ஆக இருக்கும் என்று தொழில்துறை அமைச்சகத்தின் அறிக்கை கூறியுள்ளது.

இது சீனாவில் 37-ஆகவும் அமெரிக்காவில் 45-ஆகவும் ஜப்பானில் 48-ஆகவும் இருக்கும் என்று தொழில்துறை அமைச்சகம் கூறியுள்ளது. வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் அதிக பணிபுரியக்கூடிய ஊழியர்கள் மட்டு மல்லாமல் அதிக இளைஞர்களை கொண்ட நாடாகவும் இந்தியா திகழப் போகிறது. ஆனால் இந்த இளைஞர்களை மட்டும் வைத்துக் கொண்டு இந்தியாவை முன்னேற்றி விட முடியுமா? என்ற மிகப் பெரிய கேள்வி நம்மை அச்சுறுத்துகிறது.

இந்திய இளைஞர்களுக்கு திறன் குறைவாக இருப்பதற்கான காரணம் கல்வியறிவு பற்றாக் குறை. 2011-12 தேசிய புள்ளிவிவர அமைப்பு வெளியிட்ட ஆய்வின்படி, இந்தியாவில் படிப்பறிவு இல்லாதவர் சதவீதம் 30.2 ஆக இருக்கிறது. சுதந்திரம் பெற்றதிலிருந்து கல்வியறிவில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டா லும் முழுமையான கல்வியறிவு இன்னும் பெற வில்லை. இது ஒருபுறம் இருக்க படித்தவர்கள் திறனோடு உள்ளார்களா என்பது மிகப் பெரிய கேள்வியாக இருக்கிறது. இந்தியாவில் 9.3 சதவீதம் பேர் பட்டப்படிப்பு முடித்துவிட்டு வேலைக்குச் செல்கின்றனர். ஆனால் இவர் களில் பாதிபேருக்கு வேலைக்கான அடிப் படை அறிவு இல்லை என்று ஒரு புள்ளிவிவரம் கூறுகிறது.

கல்லூரியில் மூன்று வருடமோ அல்லது நான்கு வருடமோ படித்து வரும் இளைஞர்கள் வேலைக்கான அடிப்படை அறிவு இல்லாமல் இருப்பது நமது கல்விமுறையில் உள்ள சிக்கல்களை தெளிவாகக் காண்பிக்கிறது.

அதிலும் தொழிற்கல்வியில் திறன் பற்றாக் குறை அதிகமாக இருக்கிறது. அரசு உடனடி யாக கவனத்தில் எடுத்தால்தான் அடுத்த பத்தாண்டுகளில் இதனை சரிசெய்ய முடியும்.



உதாரணமாக பொறியியல் படிப்புக்கு மாணவர்கள் தேர்ந் தெடுக்கும் துறையில் ஒரு வருடம் தொழில் நிறுவனத்தில் பயிற்சி எடுப்பதை கட்டாய மாக்கலாம். இதுபோன்ற முயற்சிகள் மூலமே திறனை அதிகப்படுத்த முடியும்.





இந்தியாவில் ஒவ்வொரு வருடமும் 6 கோடி இளைஞர்கள் கல்லூரி படிப்பை முடிக்கின்றனர். இவர்களில் பெரும்பாலும் பொறியியல் மற்றும் எம்பிஏ பட்டதாரிகளாக இருக்கின்ற னர். இதை தவிர்த்து அக்கவுண்டிங் படிப்பை முடித்தவர்கள் அதிகம் இருக்கின்றனர். இவர்களில் வேலைதேடுவோர் படிப்புக் கேற்ற வேலையை தேடுவதில்லை. ஏதாவது ஒரு வேலை கிடைத்தால் போதும் என்ற மனநிலைக்கு வந்துவிடு கின்றனர்.



அரசு மட்டுமல்லாமல் தனியார் நிறுவனங்களும் இலவச திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்க முன்வர வேண்டும். தற்போது சில நிறுவனங்கள் திறன் மேம்பாடு பயிற்சி அளித்து வேலைவாய்ப்பை வழங்குகின்றன. இதேபோல் மற்ற நிறுவனங்கள் தனித்தனி யாகவோ அல்லது இணைந்தோ திறன் மேம்பாட்டு பயிற்சியை வழங்க வேண்டும். அப்போதுதான் விரைவாக இளைஞர்களை திறன் படைத்தவர்களாக உருவாக்கமுடியும்.

பொருளாதார அளவில் இந்தியாவுக்கு கிடைத்த மிகப் பெரிய வாய்ப்பு 'டெமோ கிராபிக் டிவிடெண்ட்'. இந்த வாய்ப்பை மத்திய அரசு நழுவவிடக்கூடாது. டெமோ கிராபிக் டிவிடெண்டால் இந்தியாவின் பொருளாதார நடவடிக்கை அதிகரிக்கும். பொருளாதார நடவடிக்கை அதிகரித்தால் உற்பத்தி அதிகரிக்கும். தற்போதைய நிலையில் 1 கோடி இளைஞர்களில் 10 சதவீதம் பேர் மட்டுமே அடிப்படை வேலைக்கான திறனுடன் உள்ளனர். இதனால் 90 சதவீத இளைஞர்களை உடனடியாக வேலையில் ஈடுபடுத்துவது மிக சிரமம். இதனால் நாட்டில் வேலை வாய்ப்பின்மை அதிகரிக்கும். வேலைவாய்ப் பின்மை நாட்டின் பொருளாதாரத்திற்கு மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். இந்த நிலை ஏற்பட்டுவிடக் கூடாது. இளைஞர்களின் திறனை மேம்படுத்தி னால் மட்டுமே இந்தியாவின் முன்னேற்றக் கனவும் சாத்தியமாகும்.

எதிர்கால இந்தியா இளைஞர்கள் கையில் என மேடைக்கு மேடை முழக்க மிடும் அரசியல்வாதிகள், திறன் மிக்க இளைஞர்களால் தான் இது சாத்தியம் என்பதை உணர்ந்து அதை செயல்படுத்த வேண்டும். மேடை முழக்கமோ, இளைஞர்கள் பெருக்கமோ எந்த வகையிலும் வலுவான இந்தியா உருவாக்கத்துக்கு அடித்தள மிடாது.

**– வி. அருணாச்சலம்**

ஜிஎஸ்டி இந்த தாரக மந்திரத்தை உச்சரிக்காத இந்திய தொழில் நிறுவனங்கள் இன்று இல்லை."சரக்கு மற்றும் சேவை வரி" (ஜிஎஸ்டி) சுதந்திர இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் மிகப்பெரிய "வரிச்சீர்த்திருத்தம்" என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

மத்திய அரசால் வசூலிக்கப்படும் கலால் வரி, சேவை வரி, விற்பனை வரி மற்றும் மாநில அரசால் வசூலிக்கப்படும் விற்பனை வரி, நுழைவு வரி, ஆடம்பர வரி போன்ற 23 மறைமுக வரிகளை உள்ளடக்கி ஜி.எஸ்.டி என்று ஒரே வரியாக அமல் செய்யப்பட உள்ளது.

ஏறத்தாழ 10 ஆண்டு போராட்டத்திற்கு பிறகு மத்திய அரசு, மாநில அரசுகளின் ஒப்புதலோடு, கூடிய விரைவில் அதாவது ஜூலை 1 முதல் ஜிஎஸ்டி-ஐ நடை முறைக்கு கொண்டு வர அனைத்து முன்னேற்பாடுகளையும் போர்க்கால அடிப்படையில் செய்து வருகிறது.

மத்திய சரக்கு மற்றும் சேவை வரி (CGST), ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி (IGST), யூனியன் பிரதேச சரக்கு மற்றும் சேவை வரி (UTGST), மாநில அரசுகளுக்கு ஏற்படும் வரி இழப்பை ஈடு செய்யும் மசோதா ஆகிய 4 துணை மசோதாக்கள் மக்களவையில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதை தொடர்ந்து மாநில சரக்கு மற்றும் சேவை வரி (SGST) அனைத்து மாநில சட்டசபைகளில் நிறைவேற்ற வேண்டும். தமிழகத்திலும் அதற்கான பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது.

மத்திய நிதியமைச்சர், மாநில நிதியமைச்சர்கள் போன்ற 32 பிரதிநிதிகளைக்




# ஒரே நாடு... ஒரே வரி



கொண்டு அமைக்கப்பட்ட ஜிஎஸ்டி அமைப்பு (GST Council) வரி விதிப்பு சம்பந்தமான அனைத்து முடிவுகளையும் எடுக்கும். இந்த அமைப்பு இதுவரை 12 முறை கூடி விவாதித்துள்ளது.

தற்போதைய நிலையில் வரி விகிதங்கள், ஜிஎஸ்டியின் கீழ் 5%, 12%, 18%, 28% என்ற 4 பிரிவுகளில் வரி விதிப்பு இருக்கும். கார், காற்றேட்டப்பட்ட குளிர் பானங்கள், புகையிலை மற்றும் ஆடம்பரப் பொருட்களுக்கு மாநில வரி வருவாய் இழப்புகளை ஈடுசெய்யும் வகையில் கூடுதல் வரி விதிப்புகள் முதல் 5 வருடங்களுக்கு விதிக்கப்பட உள்ளது.

கடந்த ஆண்டின் பணமதிப்பு நீக்கம் கருப்புப் பணத்தை ஒழிக்க ஏற்படுத்தப்பட்ட அபாரமான திட்டம் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் நடைமுறைப்படுத் தப்பட்டதில் ஏற்பட்ட குளறுபடிகளையும், பலவீனங்களையும் ஜிஎஸ்டி நடைமுறையில் அரசு அனுமதிக்கக் கூடாது.

தற்போதைய முறையில் மத்திய இலா காக்களும் அரசு மாநில இலாகாக்களும் இணைந்து செயல்பட வேண்டிய அவசியம் உள்ளது. மேலும், 5 வகை வரி விகிதங்களுடன் சரக்கு மற்றும் சேவைக்கான வரியாக விதிக்கப்பட இருக்கிறது. தற்போதைய சேவை வரி 15% என்னவாக மாறும் என்பதையும் பொருத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

கால்பந்தாட்டத்தில் கோல்போஸ் டுக்கு 50 அடி முன்பாக பந்து இருப்பது போன்ற நிலையில் ஜிஎஸ்டி அமல்படுத்தப்படும் நிலை உள்ளது. பல நாடுகளில் வரிதாரர்களை அரசாங்கம் வாடிக்கையாளர்களாக கருதுகிறது.

காந்தியடிகள் கூறியது

"வாடிக்கை யாளர்களே நமது கடவுள். அவர்களைத் தான் நாம் சார்ந்து இருக் கிறோம். வாடிக்கையாளர்களின் நலனில் தான் நமது எதிர்காலம் உள்ளது".

**நம் நாட்டிலும் ஜிஎஸ்டி-ன் வரிதாரர்களை வாடிக்கையாளராக கருதி அவர்களுக்கு ஏற்படும் ஐயங்களையும் தேவைகளையும் பூர்த்தி செய்து உரிய வரியை வசூல் செய்யும் பட்சத்தில் இந்தியா ஜிஎஸ்டி நடைமுறையில், உலகில் சிறப்பான இடம் பெறும்.**

- அகிலாண்டேஸ்வரி

# ப்படி இருக்கிறது இந்தியா?

தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த கர்நாடகமும் தமிழ்நாடும் கூட்டாக என்ன திட்டங்களை வகுத்துள்ளன? விவசாயிகளுக்கு எப்படி விழிப்புணர்வை ஏற்படுத்தப்போகின் றன? காவிரி மேலும் கெடாமலிருக்க என்ன பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கப்போ கின்றன? மழை வளம் பெருக, வன வளத்தை எப்படிப் பழைய நிலைக்குக் கொண்டுவரப் போகின்றன?

தமிழகத்தின் வரலாறு காணாத வறட்சிச் சூழல் தொடர்பில் பேசுகையில், ஜீவாதார நதியான காவிரியின் நீர்ப் பகிர்வு தொடர்பில்



# பருவ காலங்கள் மாறுவதால் விவசாயிகள் யோசிக்க வேண்டும்..!

பேசுவது தவிர்க்க முடியாததாகிறது. ஒரு வகையில் காவிரியை முன்வைத்து, மாநிலத் தின் ஏனைய நதிகளையும் மாநிலத்தின் விவசாய முறையையும் விவாதிக்கும் விஷயம் இது.

வட இந்தியாவைப் போல அல்லாமல் தென்னிந்தியா எப்போதுமே பருவமழையைச் சார்ந்துதான் இருக்கிறது. பருவமழையும் சமீப ஆண்டுகளாக நிச்சயமற்றதாகவும் இடரை ஏற்படுத்துவதாகவும் இருக்கிறது. கடந்த சில பதின் ஆண்டுகளாக தென் மேற்குப் பருவ மழை நிச்சயமாகப் பெய்யும் என்று எதிர்பார்க்க முடியாததாகவும், பொழியும் அளவு குறைந்து கொண்டும் இருக்கிறது. இனி காவிரி நதி என்ன ஆகும்?

கோடைக் காலத்தில் பெய்யும் மழையின் போதும் தண்ணீர் கிடைக்கும் அளவு, முன்பைப் போல இல்லை. பருவமழை நன்றாகப் பெய்யும் காலத்தில் இரு மாநிலங்களுக்கும் இடையில் பிரச்சினைகள் ஏற்படுவதில்லை. இப்போது இருப்பதைப் போலப் பற்றாக்குறை ஆண்டுகளில் பெரிய அரசியல் நெருக்கடியாக வும் உருவாகிவிடுகிறது.

வருத்தம் என்னவென்றால், இனி மழை குறையும் ஆண்டுகள்தான் அதிகமாக இருக்கப் போகின்றன.

ஒருகாலத்தில், காவிரியின் பாசனப் பகுதி வளம் மிக்கதாக இருந்தபடியால் காடுகள் செழித்தன, வேளாண்மை அமோக மகசூலைத் தந்தது. அதையொட்டிய பகுதிகளில் தொழிற் சாலைகளை நிறுவியதால் தொழில் வளமும் பெருகியது. இப்போது இந்த மூன்றுமே ஒன்றுக்கொன்று ஆபத்தாக மாறிக்கொண் டிருப்பதால் அச்சப்படும்படியான சூழ்நிலை ஏற்பட்டுவருகிறது.

காவிரி நதி நீரைப் பகிர்ந்துகொள்வதில் தமிழகம் - கர்நாடகம் இடையிலான போராட் டங்கள் ஓயும் என்பதற்கான அறிகுறிகள்

இதுவரையில் இல்லை. தமிழ்நாட்டின் டெல்டா பகுதி விவசாயமும் பொருளாதார மும் காவிரியை நம்பித்தான் இருக்கின்றன.

ஆண்டுதோறும் நீர்வரத்து குறைந்து, காய்ந்து வற்றி வரும் நதிக்காக இரு மாநிலங் களும் எல்லா வகைகளிலும் போராடுகின்ற னவே தவிர, நீண்ட காலத் தீர்வுக்கு வழி என்ன என்று இரண்டு மாநிலங்களும் யோசிக்கும் நிலையில் இல்லை. இந்த நிலை மாற வேண் டும். மாற்று வாய்ப்புகளை இரு மாநிலங் களும் பேச வேண்டும். காவிரி உற்பத்தியாகும் கர்நாடகத்திலும் அது பாயும் தமிழ்நாட்டிலும் நிலப் பயன்பாட்டை மாற்றியமைக்க வேண்டி யதன் அவசியத்தை இது நமக்கு உணர்த்துகிறது.

காவிரிப் பாசனப் பகுதியில் பாரம்பரிய மாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த சாகுபடி முறைகள் கைவிடப்பட்டதால் பிரச்சினை பெரிதாகிவிட்டது. புன்செய் பயிர்கள் மட்டுமே சாகுபடியாகி வந்த பகுதிகளில், தண்ணீர் அதிகம் தேவைப்படும் நெல், கரும்பு போன்ற பயிர்களே ஏக்கர் கணக்கில் பயிரிடப்பட்டன. இதனால், தண்ணீருக்கான தேவை அதிகமாகியது.

தென் மேற்குப் பருவமழையால் கிடைக் கும் மழை நீர் அளவு குறைந்து வருவதாலும் ஆற்றுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களாலும் சாகு படி முறையிலும் பயிர்த் தேர்வு முறையிலும் மாற்றங்கள் அவசியம். கிடைக்கும் சிறிதளவு நீரை வீணாக்காமல், சாகுபடியை லாபகர மாக்க புன்செய் பயிர்களையே நாட வேண்டும். சாரமிழந்து வரும் மண் வளத்தைக் கூட்டவும் அது உதவும்.

தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த கர்நாடகமும் தமிழ்நாடும் கூட்டாக என்ன திட்டங்களை வகுத்துள்ளன? விவசாயி களுக்கு எப்படி விழிப்புணர்வை ஏற்படுத்தப் போகின் றன? காவிரி மேலும் கெடாமலிருக்க என்ன பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கூட்டாக எடுக்கப்போகின்றன? மழை வளம் பெருக, வன வளத்தை எப்படிப் பழைய நிலைக்குக் கொண்டுவரப்போகின்றன?

சொட்டு நீர்ப்பாசனம், தெளிப்புப் பாசனம், இறவைப் பாசனம் போன்ற தண்ணீர் சிக்கன நடைமுறைகளை விவசாயிகளிடத்தில் பெருமளவில் கொண்டுசெல்ல வேண்டும். மழை நீர் சேமிப்பைத் தீவிரமாக அமல்படுத்த வேண்டும். கழிவுநீரைச் சுத்தப்படுத்திப் பயன் படுத்தும் எளிய முறைகளைக் கையாள வேண் டும். நகர்ப்புற கழிவுநீர், ஆலைகளின் நச்சு நீர் கலவாமல் நதியைக் காக்க வேண்டும்.

பருவநிலை மாறுதல்களால் மழைப் பொழிவு குறைவதும், காலமல்லாத காலத்தில் பெய்வதும் உலக வழக்கமாகிக்கொண்டி ருக்கிறது. காவிரியில் தண்ணீர் கிடைத்தபோது நெல், கரும்பு பயிரிட்ட அதே வேகத்தில், அதே அளவில், இரு மாநிலங்களிலும் மரங்களை வளர்ப்பதில் அடுத்த சில ஆண்டுகளில் முனைப்பு காட்டினால்தான் நீர்ப்பெருக்கை மேலும் ஏற்படுத்த முடியும்.

காவிரி நீரைச் சாகுபடிக்குப் பயன்படுத்து வதை மட்டுமே பிரதானமாக்க வேண்டும். வழியில் உள்ள நகரங்களுக்கும் ஊர்களுக்கும் தொலைதூரத்தில் உள்ள பெருநகரங்களுக்கும் குடிநீர் எடுப்பதைக் கைவிட வேண்டும். மணல் கொள்ளை என்பது தனிச் சம்பவம் அல்ல. காவிரி உள்ளிட்ட ஆறுகளை அழிப்பதற்கான செயல். அதை மாநில அரசுகளும் மக்களும் உள்ளூர் அமைப்புகளும் இணைந்து தடுக்க வேண்டும். முக்கியமாக, மாற்றுச் செயல் திட்டங்களுக்கான குரல்கள் விவசாயிகள் தரப்பிலிருந்து எழ வேண்டும்!

தமிழகத்தில் போதிய நீர் இல்லாமல் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், பயறு வகைச் சாகுபடியைத் தேர்வுசெய்தால் குறைந்த நீரைக் கொண்டு விவசாயிகள் நல்ல சாகுபடியையும் அதன் மூலம் வருவாயையும் பெற முடியும் என்று நம்பிக்கையளிக்கிறார்கள் நிபுணர்கள்.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் ஆண்டுக் குச் சுமார் 10 லட்சம் ஏக்கரில் உளுந்தும், சுமார் 6 லட்சம் ஏக்கரில் பச்சைப் பயறும் சாகுபடி செய்யப்படுகின்றன. தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், மாநிலமெங்கும் உளுந்து சாகுபடிப் பரப்பை மேலும் அதிகரிக் கத் தற்போது தமிழக அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

**– ரமேஷ்குமார்**



ஆ. மவுரியன்

சரித்திரத் தொடர் 4

## தமிழ் மண்ணின் வீர வரலாறு

# மாவீரன் மருதநாயகம்

சென்னையில் கிழக்கிந்திய கம்பெனியை நிறுவிய ஆங்கிலேயரான இராபர்ட் கிளைவ் வணிகராக மட்டுமின்றி, சிறந்த அரசியல்வாதியாகவும் இருந்தார். தனது கம்பெனிக்கு பாதுகாப்பாக இங்கிலாந்து நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட படையை யும் வைத்திருந்தார்.

இதே போல் ஐரோப்பாவில் அவர்களுக்கு சவாலாக இருந்த பிரெஞ்சு கம்பெனிகளும் தங்களுக்கென பிரெஞ்சுப்படையை வைத் திருந்தன. இதற்கு தாங்கள் ஒருவருக்கொருவர் கொண்ட பகை காரணமாக, எங்களுக்கு ஒரு படை தேவை என அன்றைய ஆட்சியாளரான ஆற்காடு நவாபிடம் கூறினர்.

காரணம், அப்போது இந்தியாவை ஆக்கிர மிப்பதில் இங்கிலாந்துக்கும், பிரான்சுக்கும் கடும் போட்டி நிலவியது. உலக அளவிலும் இவ்விரு நாடுகளுக்கிடையே மோதல் இருந்து வந்தது. ஆனால், அது இந்தியாவையே ஆக்கிரமிக்கப் போகிறது என்பது அப்போது ஆற்காடு நவாபுக்குத் தெரியவில்லை.

**இப்படி நடந்திருந்தால்?**

மருதநாயகம், ஹைதர் அலி, பூலித்தேவன் ஆகியோர் சமகாலத்தவர்கள். சமமான வீரர்கள். இவர்கள் ஒருவருக்கொருவர் போரி டாமல் ஒன்றுபட்டிருந்தால் அன்றைய தமிழ் மண்ணில் ஆங்கிலேயர் சாம்ராஜ்யம் நிலைகுலைந்திருக்கும். ஹைதர் அலியும், பூலித் தேவனும் ஆரம்பம் முதலே ஆங்கிலேயர்களை எதிர்த்தவர்கள். ஆனால் மருதநாயகம் வாழ் நாளில் இறுதிக் கட்டத்தில்தான் ஆங்கிலேயர் களை எதிர்த்தார்.

ராணுவ அறிவு இருந்த அளவுக்கு, அரசியல் அறிவிலும், தாயகத்தின் வரலாற்று அறிவிலும் மருதநாயகம் மற்ற இருவரையும் விட, தெளிவற்றவராக இருந்தது தான் அதற்குக் காரணம் எனலாம். எனினும் கடைசியில் அந்தக் குறையை நிவர்த்தி செய்து தன்னை விடுதலைப் போராட்ட வீரராக அடையாளப் படுத்தினார் மருதநாயகம்.

ஆரம்ப நாட்களிலேயே ஹைதர் அலி, மருதநாயகம், பூலித்தேவன் ஆகியோரிடையே புரிந்துணர்வு ஏற்பட்டிருந்தால் தமிழக வரலாறு திசைமாறியிருக்கும்.

மருதநாயகம் மதுரையை தலைநகராக கொண்டு தென் தமிழகத்தில் பெரும் பகுதியை சுமார் 7 1/2 ஏழரை ஆண்டுகாலம் சிறப்பாக ஆட்சி செய்தார். நான் போர்வீரன் மட்டுமல்ல, மிகச்சிறந்த ஆட்சியாளன்

என்பதையும் தனது செயல்பாடுகளால் பதிவு செய்தார். அவரது ஆட்சியில்தான் தென் தமிழகம் பொதுப்பணித் துறையில் சிறப்பாக உருவாகியது.

ஆற்காடு நவாபின் கடும் எதிர்ப்பையும் மீறி *6.4.1756*ல் மதுரை மண்டலத்தின் ஆட்சி நிர்வாகத்தை, ஆங்கிலேயர்கள் மருதநாயகத் திடம் வழங்கினார்கள். *1759*ல் கவர்னர் பதவியை வழங்கினார்கள். தன்னம்பிக்கை இல்லாத ஆற்காடு நவாபை புறக்கணித்து, தன் மீது நம்பிக்கை வைத்த ஆங்கிலேயர்களை; தன் நிர்வாகத்திறனால் வியப்பில் ஆழ்த்தினார் மருதநாயகம்!

காவிரி காவலன்!

மக்களை காப்பதிலும் சரி, அவர்களின் எழிலார்ந்த வாழ்வை உயர்த்துவதிலும் சரி, மருதநாயகம் தொலை நோக்கு பார்வையுடன் செயல்பட்டார். ஒருமுறை பிரெஞ்சுப் படைக்கு எதிராக போர் நடத்திக் கொண்டிருந்த போது, போரின் ஒரு திட்டமாக காவிரி யாற்றின் கால்வாய்களையும், தடுப்பணைகளையும் உடைக்கும் பணியை பிரெஞ்சுப் படை செய்யத் துணிந்தது. இதன் மூலம் மருதநாயத்தின் படையை வெள்ளத்தில் மூழ்க செய்வது அவர்களின் திட்டம். இதை உளவு மூலம் அறிந்த மருதநாயகம், பிரெஞ்சுப் படையின் திட்டத்தை தவிடு பொடியாக்கினார். இதன் மூலம் தஞ்சை மண்டலத்தில் விவசாயத்தையும், விவசாயிகளையும் காப்பாற்றினார்.

நாட்டின் வளத்தை பெருக்குவதிலும், அடிப்படை கட்டமைப்புகளை உருவாக்குவதிலும் அன்றைய கால கட்டத்தில் மருதநாயகம் மிகச்சிறந்த முன்மாதிரி ஆட்சியாளராக திகழ்ந்தார். இன்று மதுரையில் இருக்கும் கான்சா மேட்டுத் தெரு, கான்சாபுரம், கான் பாளையம் போன்ற பகுதிகள் அவர் காலத்தில் தான் உருவாக்கப்பட்டன.

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் மற்றும் கூமாப்பட்டிக்கு அருகே உள்ள கான்சாஹிபுரம், தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் மற்றும் தேனி மாவட்டம் பெரிய குளம் அருகிலுள்ள கான்சாஹிப்புரம் அல்லது மம்சாபுரம் ஆகியன அவரது புகழை கூறிக்கொண்டிருக்கின்றன.

## முல்லைப் பெரியாறு

இன்று பரபரப்பாக பேசப்படும் சர்ச்சைக் குரிய பெரியாறு அணைக்கட்டிலிருந்து, பாசன நீரை மதுரைக்கு கொண்டு வர அன்றைக்கு திட்டமிட்டவர் இவர்தான். தமிழகத்தில் உருவாகி, தமிழகத்தை செழிக்க வைக்கும் வற்றாத ஜீவ நதியான தாமிரபரணியில், அணைக் கட்டு ஒன்றை கட்டினார். திருநெல்வேலியில் உள்ள

மேட்டுக் கால்வாய் திட்டத்தை உருவாக்கி அதை வடிவமைத்தார். விவசாயம்தான் நாட்டின் உயிர்துடிப்பு என்பதை உணர்ந்த மருதநாயகம், அதற்காக எல்லா வகையிலும் பாடுபட்டார். விவசாயத்திற்கு அடுத்த தொழிலான நெசவுத் தொழிலையும் ஊக்குவித்தார். இவரது ஆட்சிக் காலத்தில்தான் வட

இந்தியாவிலிருந்து சௌராஷ்டிர மக்கள் அதிகமாக மதுரைக்கு வருகை தந்தனர். அவர்களின் உழைப்புக்கு உறுதுணையாக திட்டங்களை வகுத்து நிதியுதவியும் செய்தார். இதனால் உழவுத்தொழிலுடன், நெசவுத்தொழிலும் செழித்தது.

## போக்குவரத்துத் துறை

நாட்டின் வணிகத்துக்கு துறை முகங்களும், நல்ல சாலைகளும் முக்கியம் என்பதை அறிந்து தரமான சாலைகளை அமைத்தார். அன்று ஆங்கிலேயர்களால் கண்டுபிடிக்கப்பட்டு, இன்று இந்தியாவின் மிகச் சிறந்த சுற்றுலாத் தலமாக திகழும் கொடைக்கானலுக்கு முதலில் சாலை அமைக்கப்பட்டது மருதநாயத்தின் ஆட்சியில்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

**நவீன இயந்திரங்கள் இல்லாத அக்காலத்தில் கொடைக்கானல் மலையடிவார பாதைகளை சிறப்பாக அமைத்து ஆங்கிலேயர்களை வியப்பில் ஆழ்த்தினார்.**

– தொடரும்.

# இரட்டை இலைக்கு

2016 தேர்தலில் திமுக கூட்டணிக் கோளாறுதான் இந்த முறை ஜெயலலிதாவை மீண்டும் ஆட்சியில் அமர்த்தியது. ஆட்சி வாய்ப்பை திமுக இழந்தது. ஸ்டாலினை கருணாநிதி முழுவதும் நம்பினார். ஆவரது தேர்தல் வியூகம் மற்றும் கூட்டணி கணிப்பு தவறாகப் போனது. இது மக்கள் விரும்பிய ஆட்சி அல்ல.



இன்றைக்கு ஜெயலலிதாவின் மரணம் பற்றி பல்வேறு வதந்திகள் பரப்பப் படுகின்றன. ஜெயலலிதாவால் சிறிது காலம் ஒதுக்கி வைக்கப்பட்டு, மீண்டும் சேர்க்கப் பட்ட சசிகலா, ஜெயலலிதாவை அரசியலுக்கு அழைத்து வந்ததே நான்தான் என்கிறார். நான் சொல்லித்தான் யாருடன் கூட்டணி என்று ஜெயலலிதா முடிவுசெய்தார். பல முக்கிய அரசியல் முடிவுகளை நான் சொல்லித்தான் எடுத்தார் என்றும் சசிகலா சொல்கிறார். ஜெயலலிதாவைச் சந்திக்க வேண்டும் என்றாலோ அவருக்குத் தகவல் தர வேண்டும் என்றாலோ சசிகலாவைத் தாண்டித்தான் அல்லது சசிகலா மூலமாகத் தான் செல்ல வேண்டும். இப்படிப் பல பிரச்சினைகள் இருந்ததை நாம் அறிவோம்.

எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு ஜானகி அணி, ஜெயலலிதா அணி என இரண்டாகப் பிரிந்தது. ஜானகி அம்மையார் எம்.ஜி.ஆர். மனைவி என்றாலும், எம்.ஜி.ஆருக்குப் பின் அவரைத் தமிழக மக்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. எனவே, தோற்கடிக்கப்பட்டார். ஜெயலலிதா **21** தொகுதிகளில் வெற்றிபெற்றார். திமுக ஆட்சியைப் பிடித்தது. கருணாநிதி முதல்வர் ஆனார். இரட்டை இலைச் சின்னம் முடக்கப்பட்டது.

அதன் பின் எனக்கு அரசியலே வேண்டாம் என்று ஒதுங்கிக்கொண்டார் ஜானகி. கட்சி ஜெயலலிதா வசம் போனபோது, முடக்கப்பட்ட இரட்டை இலைச் சின்னமும் திரும்பக்கிடைத்தது. **1991**-ல் ராஜீவ் காந்தி கொல்லப் பட்டார். அந்த அனுதாப அலை காரணமாக அதிமுக கூட்டணி மிகப் பெரும்பான்மையைப் பெற்றது. ஜெயலலிதா முதல்வர் ஆனார். ஆனால், ராஜீவ் ரத்தம் எனக்கு வெற்றியைத் தேடித் தரவில்லை. என் செல்வாக்குதான் காரணம் என்றார் ஜெயலலிதா.

சாலையில் தடுப்புகள், போக்குவரத்து நிறுத்தம் என்று பகட்டு அரசியலை ஜெயலலிதா நடத்தினார். அவரது வளர்ப்பு மகன் திருமணம் எம்.ஜி.ஆர். தொடங்கிய அதிமுகவின் ஆட்சியில் முதல் கரும்புள்ளி. பெரும் ஊழல்கள், சசிகலா குடும்பத்தினரின் மிரட்டல்கள் என்று ஜெயலலிதாவின் ஆட்சி மிகப் பெரும் விமர்சனத்துக்குள்ளானது. ஊழல் வழக்குகளுக்காக மூன்று முறை சிறை சென்றவர் ஜெயலலிதா. எப்படி ஆட்சி நடத்த வேண்டும் என்பதற்கு உதாரணம் எம்.ஜி.ஆர். எப்படி ஆட்சி நடத்தக் கூடாது என்பதற்கு உதாரணம் ஜெயலலிதா.

ஜெயலலிதாவை ஏற்றுக்கொண்ட தொண்டர்கள்கூட, நமக்கும் ஒரு நாள் எம்.எல்.ஏ., எம்.பி., அமைச்சர் என்று வாய்ப்பு தருவார் என்றே எதிர்பார்த்தனர். ஜெயலலிதாவின் பலம் அதுதான். கட்சியின் கிளைக் கழகச் செயலாளர், ஊராட்சி உறுப்பினர், மாநகராட்சி கவுன்சிலர் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர், அமைச்சர், நாடாளு

# முடிவா? விடிவா?



மன்ற உறுப்பினர் ஆனார்கள். எம்.ஜி.ஆர். தனது அரசியல் வாரிசு ஜெயலலிதா என்று அறிவிக்கவில்லை. ஆனால், கோடிட்டுக் காட்டினார். முதலில் சத்துணவு ஆலோசகர், பின் கொள்கைப் பரப்புச் செயலாளர், பிறகு மாநிலங்களவை உறுப்பினர் என்று கட்சியில் ஒரு முக்கிய சக்தியாக ஜெயலலிதாவை முன்னிறுத்தினார்.

ஜெயலலிதா அப்படி யாரையும் தனக்குப் பிறகு என்று அடையாளம் காட்டவில்லை. இப்போது சசிகலா, ஓ.பன்னீர்செல்வம், தீபா என்று ஒவ்வொருவரும் ஒரு காரணம் சொல்லி அதிமுகவைத் தங்கள் வசமாக்கிக்கொள்ள முயற்சி செய்கிறார்கள்.

சசிகலா மீது அடிமட்டத் தொண்டனுக்கு எந்த ஈர்ப்பும் இல்லை. உண்மையோ பொய்யோ ஜெயலலிதா மரணத்தையும் சசிகலாவையும் சம்பந்தப்படுத்தி வரும் செய்திகளைத் தொண்டர்கள் நம்புகிறார்கள். ஓ.பன்னீர் செல்வத்தைப் பொறுத்தவரை, ஜெயலலிதா ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாகிப் பதவி பறிபோய் சிறை சென்றபோதெல்லாம் பன்னீர்செல்வத்தைத் தான் முதல்வராக்கினார்.



எம்.ஜி.ஆர். காலத்துப் பிரமுகர்கள் இப்போது சிலர் இருந்தாலும் அவர்களையெல்லாம் நம்பாமல் பன்னீர் செல்வத்துக்கே வாய்ப்பு தந்தார்.

சசிகலாவின் ஆதரவு, பன்னீர் செல்வத்துக்கு அப்போது இருந்ததும் உண்மை. அதேபோல், சசிகலா பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டபோது வார்த்தைக்கு வார்த்தை 'மாண்புமிகு சின்னம்மா' என்று சொன்னார் பன்னீர்செல்வம். இப்போது அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சொல்வது அவரது அரசியல் தற்காப்புதானே தவிர, வேறொன்றும் இல்லை. இன்னொரு உண்மையையும் எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள்.

ஜெயலலிதாவின் முடிவையே மாற்றும் அதிகாரம் உள்ள சக்தியாக சசிகலா இருந்தார் என்பதும் உண்மை. பன்னீர்செல்வத்தை முதலமைச்சராக்க வேண்டாம் என்று சசிகலா தீர்மானித்திருந்தால், பன்னீர்செல்வத்துக்கு அந்த வாய்ப்பு நிச்சயம் கிடைத்திருக்காது. தீபாவைப் பொறுத்தவரை அவர் ஜெயலலிதாவின் அண்ணன் மகள் அவ்வளவே. மக்களிடம் செல்வாக்கைப் பெற்றிருந்த எம்.ஜி.ஆர். தொடர்ந்து முதல்வராக இருந்தார்.

ஜெயலலிதா அப்படி இருக்கவில்லை. இப்போது உச்ச நீதிமன்றத் தீர்ப்பைச் சுட்டிக்காட்டி, அரசு அலுவலகங்களில் அவர் படம் வைக்கக் கூடாது என்று சொல்லப்படுகிறது. அவருக்கு பாரத ரத்னா கிடைக்காது. சமாதிக்கான செலவை அரசு ஏற்கக் கூடாது என்றெல்லாம் பேச்சு எழுகிறது. இவையெல்லாம் எம்.ஜி.ஆர். தொடங்கிய அதிமுகவின் இருண்ட பக்கங்கள். இரட்டை இலை உதிரத் தொடங்கிவிட்டதா? இல்லை வளர்கிறதா? என்ற கேள்விக்கு இடைத் தேர்தல்தான் பதில் சொல்லும்.

– ஆசிரியர்

# ஓயாத அலையா பிரதமர்?



காலனியாதிக்கத்துக்கு எதிரான, நீண்ட நெடிய போராட்டத்தின் விளைவாக மதச்சார்பற்ற ஜனநாயகக் குடியரசாக இந்தியா உருவெடுத்தது. மத அடிப்படையிலான தேசப் பிரிவினை கூட, இந்தியா அப்படி உருவெடுப்பதைத் தடுத்துவிட முடியவில்லை. ஆனால், அந்த நிலை இனி நீடிக்குமா என்ற ஐயத்தை பாஜகவின் இந்த வெற்றி உருவாக்கியிருக்கிறது.

"2024 பொதுத் தேர்தல் வரை எதிர்க்கட்சிகள் வெற்றியை மறந்துவிட வேண்டியதுதான்" என்று தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவர் உமர் அப்துல்லா சொல்லியிருக்கிறார். பெரிதும் பலவீனமான நிலையில் காங்கிரஸும், மூட்டையிலிருந்து சிதறிய நெல்லிக்காய்களைப் போல எதிர்க்கட்சிகளும் இருக்கும் நிலையில், அப்துல்லாவின் கணிப்பு உண்மையாகக் கூடிய வாய்ப்பிருக்கிறது.

இந்தியாவின் ஆகப் பெரிய மாநிலமான உத்தர பிரதேசம், நாட்டின் அரசியல் தலையெழுத்தை நிர்ணயிக்கும் மாநிலமாக விளங்குவதன் காரணமாக அம்மாநிலத்தின் சட்டப்பேரவைத் தேர்தல், ஒட்டுமொத்த நாட்டின் கவனத்தையும் கவர்வதில் ஆச்சரியமில்லை. இந்த சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக பெற்றுள்ள பெரும் வெற்றி, மதச்சார்பின்மை கோட்பாட்டுக்கு ஆதரவான சக்திகளுக்குப் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

2014 மக்களவைத் தேர்தலில் பாஜக இங்கு பெற்ற வெற்றியை 2017 சட்டப்பேரவைத் தேர்தலில் தக்கவைத்துக்கொள்வது சாத்தியமே இல்லை என்று பலரும் கருதிய நிலையில், ஏறக்குறைய 2014 வெற்றிக்கு இணையான வெற்றியை இப்போது பாஜக பெற்றிருப்பது, இந்தியா என்ற கருத்தின் (தி ஐடியா ஆஃப் இந்தியா) மீதான பலமான அடியாக மதச்சார்பற்ற, தாராளவாத சிந்தனையாளர்களால் பார்க்கப்படுகிறது.

உத்தர பிரதேசம், உத்தராகண்ட் மாநிலங்களில் பெரும் வெற்றியைப் பெற்றிருப்பதுடன், 2012 சட்டப்பேரவைத் தேர்தலில் வெறும் இரண்டு சதவீத வாக்குகளுடன் ஓரிடம் கூடப்

பெற முடியாதிருந்த மணிப்பூரில் இன்று 36% வாக்குகள், 21 இடங்களை வென்றிருப்பது பாஜகவின் மற்றுமொரு சாதனை. கோவாவிலும் மணிப்பூரிலும் காங்கிரஸ் பாஜகவை விட அதிக இடங்களை வென்றபோதிலும் வாக்கு சதவீதத்தில் பாஜகவுக்கே முதலிடம். இந்த இரண்டு மாநிலங்களிலும் ஆட்சியமைக்கத் தேவையான அறுதிப் பெரும்பான்மை காங்கிர ஸுக்கு இல்லாத நிலையில், அடுத்த இடத்தி லிருக்கும் பாஜக பிற உதிரிக் கட்சிகள் மற்றும் சுயேச்சைகளின் உதவியுடன் ஆட்சியமைப் பதற்கான வாய்ப்புகள் அதிகம் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

இதோ கோவாவில் மனோகர் பாரிக்கர் முதல்வராகிவிட்டார். அதேபோல், வடகிழக்கு மாநிலங்களைப் பொறுத்தவரை அசாமை ஏற்கெனவே கைப்பற்றியுள்ள நிலையில், இப்போது மணிப்பூரில் பெற்றுள்ள வெற்றி பாஜகவின் வரலாற்றில் மேலும் ஒரு முக்கிய மான மைல்கல். அசாம், மணிப்பூர் வெற்றி பாஜகவை முழுமையான தேசியக் கட்சியாக்கு கிறது. கடந்த 20 ஆண்டுகளாக மத்தியில் கூட்டணி ஆட்சி மட்டுமே சாத்தியம் என்றி ருந்த நிலை போய், மீண்டும் ஒற்றைக் கட்சி ஆட்சி நிலைபெறுவதற்கான அறிகுறியாக பாஜக இந்தத் தேர்தல்களில் பெற்றுள்ள வெற்றியைப் பல அரசியல் விமர்சகர்கள் பார்க்கின்றனர்.

உத்தர பிரதேசத்தில் பாஜக பெற்றிருக்கும் வெற்றியின் மிக முக்கியமான அம்சம் அது சாதி, மத அடையாள அரசியலைத் தாண்டி இருப்பதாகச் சொல்லப்படுவதுதான்.

உயர் சாதியைச் சேர்ந்தவர்கள் அதிகம் இருக்கும் பகுதிகளில் மட்டுமல்லாமல் தலித் துகள், பிற்படுத்தப்பட்டவர்கள், முஸ்லிம்கள் ஆகியோர் அதிக மாக உள்ள பகுதிகளிலும் பெரும் வெற்றிபெற்றுள்ளதால், இப்படி கூறப் படுகிறது. ஆனால், பாஜகவின் தேர்தல் வியூகம் சாதி, மத அடையாளங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டே அமைந்திருப்பதைப் பார்க்க முடிகிறது. மாயாவதியின் வலுவான அடித்தளமான ஜாதவ் சமூகத்தைத் தவிர்த்த பிற தலித் சாதியினரைத் தங்கள் பக்கம் கொண்டுவந்தது, யாதவ் சமூகத்தினரைத் தவிர்த்த பிற பிற்படுத்தப்பட்ட சமூகத்தினரை ஒருங்கிணைத்து தங்கள் பக்கம் கொண்டு வந்தது பாஜகவின் தேர்தல் வியூகம்.

இத்தகைய சமூகங்களைச் சேர்ந்தவர்களுக் குத் தேர்தலில் போட்டியிட அக்கட்சி அதிக வாய்ப்பளித்தது. அடுத்ததாக, முஸ்லிம்கள் அதிகமாக உள்ள பகுதிகளிலும் ஒரேயொரு முஸ்லிம் வேட்பாளரைக் கூட நிறுத்தாத பாஜக வென்றதற்கு முக்கியக் காரணம், முஸ்லிம் வாக்குகள் சமாஜ்வாதி, பகுஜன் சமாஜ் கட்சிகளுக்கிடையே பிளவுபட்டதாகும். ஆக, சுமார் 40 45% வாக்குகளுக்காக அகிலேஷும் மாயாவதியும் போட்டியிட, மீதமுள்ள 55 - 60% வாக்குகளைக் குறிவைத்தார் அமித் ஷா.

மணிப்பூரில் காங்கிரஸ் முதல்வர் வேட்பாளரை எதிர்த்துப் போட்டியிட்ட இரோம் ஷர்மிளா வெறும் 90 வாக்குகள் மட்டுமே பெற்றது என்பது இந்தத் தேர்தலின் ஆகப் பெரும் சோகம். மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி என்பார்கள். ஆனால், மக்களாட்சியில் மக்கள் எவ்வழியோ மன்னன் அவ்வழி என்பதே யதார்த்தம்.

மக்கள் தங்கள் தகுதிக்கேற்ற தலைவர் களையே பெறுகிறார்கள் என்பதே உண்மை. மணிப்பூர் மாநில மக்களின் உரிமைக்காக 16 ஆண்டுகள் உண்ணாவிரதம் இருந்த ஒரு மாபெரும் போராளி, ஓரிரு ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோற்றிருந்தால் அதைப் புரிந்துகொள்ள முடியும்.

**வெறும் 90 வாக்குகள் பெறுவது என்பது மக்கள் எவ்வளவு நன்றியுடையவர்கள், தார்மிக எண்ணம் கொண்டவர்கள் என்பதைக் காட்டுகிறது. ஏதோ 90 பேராவது இருந்தார்களே! மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பது எவ்வளவு பெரிய சோகமான நகைச்சுவை.**

**– சரவணன்**

# சிந்தனை முத்துக்கள்..!




**வடிவேல் பஞ்ச்...**

ஹலோ இளையராஜாவா
உங்க பாட்டு
டி.வி.யில ஓடுது
பார்க்கலாமா சார்?

**சுயநலம்**

மின்சாரம் இல்லாதபோது
தேடப்படும் மெழுகு
வர்த்தியைப்போல சிலர்
தேவைப்படும்போது மட்டும்
தேடப்படுகிறார்கள்




ஒரு சிறுவனின் கவிதை

**சாதனை**

"உன்னை யாரேனும்
நிராகரித்தால்
அவர்களை வெறுக்காதே
உலகத்தில் சாதித்தவர்கள்
அனைவரும் யாரோ
ஒருவரால்
நிராகரிக்கப்பட்டவர்கள்தான்."

**தத்துவம் மச்சி**

பகலில் தூக்கம் வந்தால்
உடம்பு பலஹீனமாக இருக்கிறது
என்று அர்த்தம். இரவில் தூக்கம்
வரவில்லை என்றால் மனசு
பலஹீனமாக இருக்கிறது
என்று அர்த்தம்



**பழகாதே....**

ஜாதி பார்த்து பேசுறவங்க கூட
பழகக்கூடாது
பழகியவர்களிடம்
ஜாதி பார்க்கக்கூடாது...




**விலையில்லா படம்**

மனிதாக வாழ்வது எளிது...
ஆனால் மனிதாபினத்தோடு
வாழ்வதுதான் பெரிது...



இந்தியாவில் நேர்மை—எளிமை—தியாகத்திற்கு எடுத்துக்காட்டாய் விளங்குபவர், திரிபுரா மாநில முதல்வர் மாண்புமிகு மாணிக் சர்கார் அவர்கள்!

- ☆ சொந்த வீடு இல்லை
- ☆ கார் இல்லை
- ☆ வாடகை வீட்டில் வாழ்க்கை
- ☆ வங்கி இருப்பு ரூ.10,800 மட்டும்
- ☆ மாதம் ரூ.5 ஆயிரம்தான் சம்பளம்
- ☆ ஒழுக்கமான வாழ்க்கை
- ☆ ஓயாத மக்கள் பணி
- ☆ 1998-மார்ச் மாதம் முதல் 19 ஆண்டுகள் தொடர்ந்து முதல் மந்திரியாக பதவி வகிப்பவர்.

**...இப்படிப்பட்ட தியாக வாழ்க்கை வாழும் மாசற்ற மாணிக்கமான மாணிக் சர்கார் அவர்கள்**




68 ஆண்டுகளாக இலவச சிகிச்சை அளித்து வரும் 91 வயது பெண் மருத்துவர் பக்தி யாதவுக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.



## நோ கமெண்ட்ஸ்




ஐந்து மாநிலங்களின் சட்டப் பேரவைகளுக்குப் பொதுத் தேர்தல் நடந்தது. அந்த மாநிலங்கள் அனைத்துக்கும் பொதுவான தேசியப் பிரச்சினை என்று ஏதும் இல்லை. அந்த ஐந்தில் ஒன்று உத்தர பிரதேசம் எனும் போது, இனி 2019 மக்களவைப் பொதுத் தேர்தல் எப்படி இருக்கும் என்ற விவாதம் தொடர்வது தவிர்க்க முடியாததாக இருக்கிறது. நாட்டிலேயே அதிக வாக்காளர்களைக் கொண்ட பெரிய மாநிலம் என்பதுடன் அரசியல்ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தது உத்தர பிரதேசம். இங்கு கிடைத்துள்ள வெற்றி பாஜக ஆதரவாளர்கள், எதிர்ப்பாளர்கள் என்ற இருதரப்புக்குமே மலைப்பாக இருக்கிறது.

பாஜக 312, அதன் தோழமைக் கட்சிகள் அப்னா தள் 9, சுஹால்தேவ் பாரதிய சமாஜ் கட்சி 4 என்று மொத்தம் 325 தொகுதிகளை வென்று, பேரவையில் நான்கில் மூன்று பங்கு இடங்களை வென்றுவிட்டன.

2014 மக்களவைப் பொதுத் தேர்தலுக்குப் பிறகு, இம்மாநிலத்தில் அரசியல் ஆதரவு அதிகம் மாறிவிடவில்லை என்பது தெரிகிறது. 2014-ல் மோடிக்கு ஆதரவு உச்சத்தில் இருந்தாலும், போகப்போகச் சரிந்துவிடும் என்று பலர் நினைத்ததைப் போல நடக்கவில்லை. 2014-ல் கிடைத்த வாக்குகள் உ.பி.யில் 43.6%-லிருந்து 41.4% ஆகவும் உத்தராகண்டில் 55.9%-லிருந்து 46.5% ஆகவும் குறைந்திருக்கிறது. 2015-ல் முக்கிய எதிர்க்கட்சிகள் பிஹாரில் பெரிய கூட்டணி அமைத்ததைப் போல இங்கே அமைக்கத் தவறியதால், பாஜக எளிதாக வெற்றி பெற்றிருக்கிறது.

# உ.பி. தேர்தல் முடிவுபோல் தமிழகத்தில் நிகழுமா?



சமாஜ்வாதி - காங்கிரஸ் கூட்டணி, சமாஜ்வாதி கட்சிக்குள் நிகழ்ந்த குடும்பச் சண்டையால் பலன் தராமல் போய்விட்டது. மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சி 2014-ஐ விட 2017-ல் 2.4% வாக்குகளைக் கூடுதலாகப் பெற்றுள்ளது. 22.2% வாக்குகளும் 19 தொகுதிகளும் அதற்குக் கிடைத்துள்ளன.

ஆட்சியில் இருப்பதால் மக்களுக்கு ஏற்படக்கூடிய அதிருப்தி யிலிருந்து விடுபட கட்சியின் மூத்த தலைவர்களிடமிருந்து விலகி னார் அகிலேஷ் யாதவ். கட்சி உடைந்ததால் ஆதரவு மேலும் குறைந்தது. சட்டம் - ஒழுங்கு நிலைமை மோசமானதற்குக் கட்சியின் மூத்த தலைமுறைதான் காரணம் என்ற அகிலேஷின் சமாதானத்தை மக்கள் ஏற்கவில்லை. தானும் ராகுல் காந்தியும்தான் இளம் தலைமுறை யினரின் சரியான பிரதிநிதிகள் என அவர் சொன்னதும் எடுபடவில்லை.

பிஹாரைப் போன்ற மெகா கூட்டணி உருவாக வேண்டும் என்றால், அதில் பகுஜன் சமாஜ் கட்சியையும் இணைத்திருக்க வேண் டும். தேர்தலுக்கு முந்தைய கூட்டணியில் தனக்கு ஆர்வம் இல்லை, தேர்தல் முடிவுகள் வெளிவந்ததும் பார்க்கலாம் என்ற மாயாவதி யின் நிலை அவருக்கே பெருத்த இழப்பை ஏற்படுத்திவிட்டது. சமாஜ்வாதியுடனும் பாரதிய ஜனதாவுடனும் வெவ்வேறு தருணங் களில் கூட்டணி வைத்த மாயாவதி, தலித்து களுக்கும் அப்பால் தனது செல்வாக்கை வளர்த் துக்கொள்ளத் தன்னுடைய உத்தியை மாற்றிக் கொள்ள வேண்டும். மொத்த வேட்பாளர்களில் நான்கில் ஒரு பகுதியினரை முஸ்லிம்களாக நிறுத்தியும்கூட, முஸ்லிம்களைத் தன் பக்கம் ஈர்க்க மாயாவதியால் முடியவில்லை.

ஒரு காலத்தில் வலுவான தேசியத் தலை வர்களை அதிகமாகவும் வலுவற்ற மாநிலத் தலைவர்களையும் கொண்டிருந்தது காங்கிரஸ். இந்த நிலையைத் தலைகீழாக அது மாற்றியாக வேண்டும். தேசிய அளவில் ராகுல் காந்திக்கு ஈர்ப்புச் சக்தி குறைவாக இருக்கிறது. மாநில அளவில் வலுவான தலைவர்கள் உருவானால் தான் வாக்குகளை ஈர்க்கும் சக்தி அதிகரிக்கும். பிற மாநிலங்களிலும் வெற்றிபெற, அமரீந்தர் சிங்கிடம் பாடம் படிக்க வேண்டும். பாஜக வில் அதிகாரமெல்லாம் ஒரேயொருவரிடம் குவிந்து கிடக்கிறது. இது மிகவும் ஆபத்தானது, விரும்பத்தகாதது. காங்கிரஸ் இதற்கு நேர்மாறாக நடந்துகொள்ள வேண்டும்.


காங்கிரஸ் தன்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டாலும் சரி, மக்களிடையே இப்போது தேசியக் கட்சி என்றால் பாஜக தான் நினைவுக்கு வருகிறது. எனவே, பாஜக வுக்கு வலுவான எதிர்க்கட்சியாக காங்கிரஸ் தன்னைத் தகவமைத்துக் கொள்ள வேண்டும். கட்சி, ஆட்சி நிர்வாகத்தில் நல்ல அனுபவம் பெற்றுள்ள மோடிக்கு எதிராக மீண்டும் மீண்டும் ராகுலைக் கொண்டுபோய் நிறுத்தக் கூடாது.

மணிப்பூரில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் மீண்டும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறத் தவறியது. கோவாவில் பாஜகவுக்கும் அதே கதிதான். அத்துடன் முதல்வராக இருந்த பர்சேகரும் தோற்றார். மணிப்பூரில் பாஜகவுக்கு அதிக தொகுதிகள் கிடைத்திருப்பது, வட கிழக்கு மாநிலங்களிலும் அரசியல் சூழல் மாறும் என்பதைக் காட்டுகிறது.

கோவாவில் 5 ஆண்டுகள் பதவியிலிருந்த பிறகு, அறுதிப் பெரும்பான்மை பெறத் தவறியது என் ஏன்று பாஜக தன்னைத்தானே கேட்டுக்கொள்ள வேண்டும். ஊழல், அதிகார துஷ்பிரயோகம் ஆகியவற்றை மக்கள் ஏற்பதில்லை. பெரும்பான்மையைப் பெறாமல் இவ்விரு மாநிலங்களிலும் ஆட்சியமைக்க பாஜக முயற்சிப்பது தார்மிக அடிப்படையில் தவறானது.

**ஒட்டுமொத்தமாக இந்த முடிவுகளை ஆராயும்போது 2014-ல் மோடிக்குக் கிடைத்த ஆதரவு அதிர்ஷ்டகரமானது அல்ல என்று தோன்றுகிறது. காங்கிரஸ் கட்சி தன்னை வலுப்படுத்திக் கொள்வதுடன், பிற எதிர்க்கட்சிகளுடன் இணைந்தும் செயல்படக் கற்றுக்கொள்ள வேண்டும்.**

**– சச்சின்**




# இத்தனை ஆறுகள் இருந்தும் பலனில்லை!

நதிகளைத் தேசியமயமாக்குவதோடு, கங்கை, மகாநதி, கிருஷ்ணா, காவேரி, வைகை, தாமிரபரணி, குமரி பழையாறு ஆகிய வற்றையும் இணைக்கக் கோரி உச்ச நீதிமன்றத் தில் நான் ஒரு மனுத் தாக்கல் செய்திருந்தேன்.

அந்த மனுவில், கூடுதலாக கேரளத்தில் வீணாகக் கடலுக்குச் செல்லும் நதிநீரைக் கிழக்கு நோக்கித் தமிழகத்துக்குத் திருப்ப வேண்டும் என்றும் கேரளா அச்சன்கோவில் - பம்பை நதிப் படுகைகளைத் தமிழகத்தின் வைப்பாறுடன் இணைக்க வேண்டும் என்றும் கோரியிருந்தேன். 30 ஆண்டு காலமாக நடந்த இந்த வழக்கின் தீர்ப்பு, 27.2.2012 அன்று வெளி வந்தது. அதில், மத்திய நீர்வளத் துறை அமைச் சகத்தின் தலைமையில் பல்வேறு மாநிலங்கள், மத்திய, மாநில அமைச்சகங்களின் பிரதிநிதி கள் 38 பேர் கொண்ட கமிட்டியை நியமிக்க வேண்டும். இந்த கமிட்டி, 2 மாதங்களுக்கு ஒரு முறை கூடி, நதி நீர் இணைப்பு நடவடிக்கை களை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என அந்தத் தீர்ப்பில் உச்ச நீதிமன்றம் கூறியிருந்தது.

தமிழகத்தில் பரவலாக இளைஞர்கள் குழுக்கள் நீர்நிலைகளையும், மறைந்துவிட்ட ஆறுகளையும் தேடத் தொடங்கியிருப்பது நம்பிக்கை தருகிறது. ஆனால், சதவிகித அடிப் படையில் இந்த எண்ணிக்கை மிகவும் குறைவு.

அப்போது நான் சங்கரன்கோவில் இடைத் தேர்தல் பணியில் இருந்தேன். தேர்தல் பணியை முடித்துவிட்டு சென்னை திரும்பிய வுடன், அந்தத் தீர்ப்பு நகலையும் அவ்வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த ஆவணங் களையும் திமுக தலைவர் கலைஞரி டம் வழங் கினேன். ஆவணங்களில் இருந்த தமிழக நதிகளின் பட்டியலைப் பார்த்த கலைஞர், "இத்தனை நதிகள் தமிழகத்தில் இருக் கிறதாப்பா?" என்று வினவினார். அவருக்கே வியப் பளிக்கிறது என்றால், இன்றைய தலை முறை யினருக்கு எத்தகைய ஆச்சரியத்தைக் கொடுக் கும் என்று சிந்தித்தேன். இதோ அந்தப் பட்டியல்.

**மாவட்ட வாரியாக முக்கிய நதிகள்:**

1) கடலூர் மாவட்ட நதிகள்: தென் பெண்ணை, கெடிலம், வராகநதி, மலட்டாறு, பரவனாறு, வெள்ளாறு, கோமுகி ஆறு, மணிமுத்தாறு, ஓங்கூர்.

2) விழுப்புரம் மாவட்ட நதிகள்: கோமுகி ஆறு, மலட்டாறு, மணிமுத்தாறு.

3) காஞ்சிபுரம் மாவட்டம்: அடையாறு, செய்யாறு, பாலாறு, வராகநதி, தென் பெண்ணை, பரவனாறு.

4) திருவண்ணாமலை மாவட்டம்: தென் பெண்ணை, செய்யாறு, வராகநதி, வெள்ளாறு.

5) திருவள்ளூர் மாவட்டம்: கூவம், கொசஸ்தலையாறு, ஆரணியாறு, பாலாறு

6) கரூர் மாவட்டம்: அமராவதி, பொன்னை.

7) திருச்சி மாவட்டம்: காவிரி, கொள்ளிடம், பொன்னை, பாம்பாறு.

8) பெரம்பலூர் மாவட்டம்: கொள்ளிடம்.

9) தஞ்சாவூர் மாவட்டம்: காவிரி, வெட்டாறு, வெண்ணாறு, கொள்ளிடம், அக்கினி ஆறு.

10) சிவகங்கை மாவட்டம்: வைகையாறு, பாம்பாறு, குண்டாறு, கிருதுமால் நதி,

11) திருவாரூர் மாவட்டம்: காவிரி, வெண்ணாறு, பாமணியாறு, குடமுருட்டி

12) நாகப்பட்டினம் மாவட்டம்: காவிரி, வெண்ணாறு.

13) தூத்துக்குடி மாவட்டம்: ஜம்பு நதி, மணிமுத்தாறு, தாமிரபரணி, குண்டாறு, கிருதுமால் ஆறு, கல்லாறு, கோராம்பள்ளம் ஆறு.

14) தேனி மாவட்டம்: வைகையாறு, சுருளியாறு, தேனி ஆறு, வரட்டாறு, வைரவனாறு.

15) கோயம்புத்தூர் மாவட்டம்: சிறுவாணி, அமராவதி, பவானி, நொய்யலாறு, பம்பாறு.

16) திருநெல்வேலி மாவட்டம்: தாமிர பரணி, கடனாநதி, சிற்றாறு, இராமநதி, மணி முத்தாறு, பச்சை ஆறு, கறுப்பா நதி, குண்டாறு, நம்பியாறு, கொடுமுடிஆறு, அனுமாநதி, கருமேனியாறு, கரமணை ஆறு. இவை தவிர, தாமிரபரணியின் துணை ஆறுகளான சேர்வ லாறு, மணிமுத்தாறு, கடனா நதி, பச்சையாறு, சிற்றாறு, பேயனாறு, நாகமலையாறு, காட் டாறு, சோம்பனாறு, கௌதலையாறு, உள் ளாறு, பாம்பனாறு, காரையாறு, நம்பியாறு, கோதையாறு, கோம்பையாறு, குண்டாறு போன்றவையும் ஓடுகின்றன.

17) மதுரை மாவட்டம்: பெரியாறு, வைகை யாறு, குண்டாறு, கிருதுமால் நதி, கள்ளி ஆறு, வைரவனாறு, தேனியாறு, வரட்டாறு, நாகலாறு, வராகநதி, மஞ்சள் ஆறு, மருதாநதி, சிறுமலையாறு, சுத்தி ஆறு, உப்பு ஆறு.

18) திண்டுக்கல் மாவட்டம்: பரப்பலாறு, வரதம்மா நதி, மருதா நதி, சண்முகாநதி, நங் கட்சியாறு, குடகனாறு, குதிரையாறு, பாலாறு, புராந்தளையாறு, பொன்னை, பாம்பாறு, மஞ்சள் ஆறு.

19) கன்னியாகுமரி மாவட்டம்: கோதையாறு, பறளியாறு, பழையாறு, நெய்யாறு, வள்ளியாறு.

20) ராமநாதபுரம் மாவட்டம்: குண்டாறு, கிருதுமால் நதி, வைகை, பாம்பாறு, கோட்ட கரையாறு, உத்திரகோசமங்கை ஆறு.

21) தருமபுரி மாவட்டம்: காவிரி, தொப்பையாறு, தென்பெண்ணை

22) சேலம் மாவட்டம்: காவிரி, வசிட்டாநதி, வெள்ளாறு.

23) விருதுநகர் மாவட்டம்: கௌசிகாறு, வைப்பாறு, குண்டாறு, அர்ஜுனா நதி, கிருதுமால் நதி.

24) நாமக்கல் மாவட்டம்: காவிரி, உப்பாறு, நொய்யலாறு.

25) ஈரோடு மாவட்டம்: காவிரி, பவானி, உப்பாறு.

26) திருப்பூர் மாவட்டம்: நொய்யலாறு, அமராவதி, குதிரையாறு.

27) புதுக்கோட்டை மாவட்டம்: அக்கினி ஆறு, அம்பூலி ஆறு, தெற்கு வெள்ளாறு, பம்பாறு, கோட்டகரையாறு.

மழைக் காலங்களில் மட்டுமே உயிர்பெறு கிற வேறு சில சிறு ஆறுகளையும் சேர்த்தால், பட்டியல் இன்னும் நீளும். தமிழ்நாட்டு நதிகளில் உள்ள நீர்த் தேக்கங்கள் / அணை களைப் பட்டியல் போட்டால், குறிப்பிட்டுச் சொல்லும்படியான அணைகளே 50 இருக் கின்றன.

**நாம் அழித்த நீர்நிலைகள்**

தமிழகத்தில் இயற்கையின் அருட்கொடை யான நதிகளையும், நீராதாரங்களையும் நாம் சரியாகப் பராமரிக்கவில்லை என்பதைத் தாமதமாக உணர்ந்திருக்கிறோம். மேலே சொன்ன பட்டியலில், பல நதிகள் தற்போது வரைபடங்களில் மட்டுமே இருக்கின்றன. நீர்நிலைகளின் நிலை அதைக் காட்டிலும்

மோசம். நாட்டின் விடுதலைக்கு முன் அதாவது 1947-ல் (அன்றைய சென்னை மாகாணத்துக்குள் இருந்த) இன்றைய தமிழக நிலப்பரப்பில் மட்டும் 50,000 நீர்நிலைகள் இருந்தன. இன்றைக்கு அது பாதிக்கும் குறைவாகிவிட்டது. வெறும் 20,000 நீர்நிலைகள் மட்டுமே எஞ்சியிருப்பதாகப் புள்ளிவிவரங்கள் சொல்கின்றன.

மதுரை, சென்னை மாநகரங்களைச் சுற்றி மட்டும் 500 ஏரிகள், குளங்கள் காணாமல் போய்விட்டன. பழவேற்காடு ஏரியை ஆந்திர அரசு சிறிது சிறிதாக அபகரித்துக்கொண்டது. சென்னைக்குக் குடிநீர் வழங்குகிற வீராணம் ஏரியிலும்கூட சரியான பராமரிப்பு இல்லை. அரசின் புள்ளிவிவரப்படி,

தமிழகத்தில் இன்றைக்கு 18,789 பொதுப் பணித் துறை ஏரிகள், 29,484 கிளை வாய்க் கால்கள், 86 ஆறுகள், 200 அணைகள் இருக் கின்றன. நிஜத்தில் எத்தனை என்பதை 'சர்வே' செய்துதான் கண்டறிய வேண்டும். நிலத்தடி நீரும் மிகவும் குறைந்துவிட்டது. இதனால் 1.10 கோடி ஏக்கர் விளைநிலங்கள் பாதிக்கப்பட் டுள்ளன. விவசாய நிலத்தின் பரப்பும் சுருங்கிக் கொண்டே வருகிறது.

இவை அனைத்திலும் அரசுக்கும், மக்களுக் கும், லாபவெறி கொண்ட ரியல் எஸ்டேட் காரர்களுக் கும் பங்கு உண்டு. 'நீரின்றி அமை யாது உலகு' என்பது வள்ளுவர் வாக்கு. நாகரி கத்தின் தொட்டிலான நதி களை அழித்தோம், விவசாயத்தின் ஆதாரமாக இருந்த நீர்நிலை களைச் சீரழித்தோம். மக்கள் தொகை குறை வாக இருந்த காலத்தில் இருந்த நீர்நிலைகளின் எண்ணிக்கையில் பாதிகூட, இன்றைய 7 கோடித் தமிழ் மக்களிடம் இல்லை என்பது வரலாற்றுப் பிழை. செய்த தவறுகளைச் சுட்டிக்காட்ட அல்ல, குட்டிக்காட்டுவதற்கே இந்த வறட்சி வந்திருக் கிறது என்று எடுத்துக்கொள்ளலாம்.

எதிர் காலத் தலைமுறையும் குடிநீர் பஞ்சத் தில் இருந்து தப்பிக்க முடியும். தமிழகத்தில் பரவலாக இளைஞர்கள் குழுக்கள் நீர்நிலை களையும், மறைந்துவிட்ட ஆறுகளையும் தேடத் தொடங்கி யிருப்பது நம்பிக்கை தருகிறது. ஆனால், சதவிகித அடிப்படையில் இந்த எண்ணிக்கை மிகவும் குறைவு. விளக்கி வைத்த வெள்ளிப் பாத்திரம்போல, மழைக்கு முன்பாக அனைத்து நீர்நிலைகளையும் மீட்டு, தூர்வாரி வைத்தால்தான் நாம் வறட்சியிலிருந்து விடுபட முடியும்.

– சமயசெல்வம்


## விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

இதழ் ஆண்டு சந்தா ரூ. 110 /-

**மக்கள் விசாரணை**

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை – 600 078. போன் : Email : writermouriyan@gmail.com
போன் : 044 – 4354 2611, செல் : 93821 33334



# பத்து ரூபாய் நாணயத்தால் பாதிக்கப்படும் பொதுமக்கள்

நாமக்கல் மாவட்டம், சுற்றுலாப்பகுதியான ராசிபுரம், மோகனூர், வையப்பமலை, திருச்செங்கோடு, பரமத்திவேலூர், சேந்தமங்கலம், ஜோடர்பாளையம் மற்றும் சேலம் மாவட்ட சுற்று பகுதிகளை கெங்கவள்ளி, ஆத்தூர், ஏற்காடு, ஓமலூர், மேட்டூர், எடப்பாடி, வீரபாண்டி, சங்கிரி, சேலம் மாநகர பகுதிகளில் இருந்து நாணயத்தை பற்றி ஒரே பேச்சாக உள்ளது.

ஏனென்று கேட்டாள் பத்து ரூபாய் நாணயங்கள் கல்ல சந்தையில் அச்சடிக்கப்பட்டன எனவும், நாளிதழில் 5 மாத முன்பு பத்து ரூபாய் பதிக்கப்பட்ட நாணயங்கள அரசு அங்கீகரிக்கப் பட்ட நாயணமாகவும் பத்து ரூபாய் வட்ட பகுதியிலிருந்து கீழ் நோக்கி இருக்கும் நாணயம் கல்ல நாணயம் என்று மக்களிடையே வதந்தி பரவியுள்ளது. இதை உறுதி செய்யும் வகையில் சேலம், நாமக்கல் சுற்று பகுதிகளில் பத்து ரூபாய் நாணயங்களை வாங்குவதற்கு வியாபாரிகள், டீ கடை, மருந்தகம், மருத்துவமனை, அங்காடிகள், திரையரங்குகள், முடி திருத்தகம், பெட்ரோல் பங்குகள், நகைக் கடைகள், உணவகங்கள், ஜவுளி கடைகள், பேருந்துகள் போன்ற இடங்களில் மக்களிடமிருந்து பத்து ரூபாய் நாணயங்களை வாங்க மறுக்கப்படுகின்றது.

மக்கள் சில இடத்தில் சண்டையிடும் சூழ் நிலை நிலவுகிறது. கடந்த மூன்று மாதத்திற்கு முன்பு சேலம் மாவட்ட ஆட்சியாளர் பத்து ரூபாய் நாணயங்கள் எல்லா இடங்களிலும் செல்லுபடியாகும், மக்கள் வதந்திகளை நம்பிவிட வேண்டாம், பத்து ரூபாய் அனைத்து நாணயங்கள் செல்லும் என்று பத்திரிகை வாயிலாக அறிக்கை அளித்து இருந்தார். இருப்பினும் மக்களிடையே அந்த வதந்தி நம்பப்பட்டு வருகின்றது.

21.11.2016 அன்று ஆர்.பி.ஐ. ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவில் இருந்து ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது. அதில் அனைத்து வடிவம் கொண்ட பத்து ரூபாய் நாணயங்கள் செல்லுபடியாகும் என ரிசர்வ் வங்கி அறிவித்தது. உறுதி அளித்தது. இருப்பினும் தனியார் வங்கிகளில் நாணயங்களை வாங்க மறுக்கின்றன. ஒருசில அரசு வங்கிகளிலும் மட்டுமே நாணயங்கள் வழங்கப்படுகிறது. அதிலும் ஆயிரம் மதிப்புள்ள பத்து ரூபாய் நாணயங்கள் வாங்கப்படுகிறது.

தனியார் வங்கிகளில் வாங்க மறுக்கின்றன. வங்கியிலே வாங்கவில்லை என்றால் நாங்கள் யாரிடம் சென்று மாற்ற இயலும் என்று வங்கிகளிலே மக்கள் புலம்பிக்கொண்டு செல்கின்றனர். அதுமட்டுமின்றி தேசிய சுங்க சாவடிகளில் ஐந்து நாணயங்கள் மட்டுமே வாங்க அனுமதிக்கின்றனர். என்னென்று அங்கு பணிபுரியும் ஊழியர்களிடம் கேட்டபோது ஒருவரிடம் இருந்து ஐந்து பத்து ரூபாய் நாணயங்களை மட்டுமே வாங்க வேண்டும் என்று உத்தரவு உள்ளதாக கூறினார்.

இதைப்போல் இல்லத்தரசிகளிடம் அவரவர் பத்து இருவது போன்று பத்து ரூபாய் நாணயங்களை வைத்துள்ளனர். அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என அறியாமல் தவிக்கின்றனர். இதையடுத்து மக்களின் கோரிக்கை என்னவென்று கேட்டபோது மத்திய அரசும், மாநில அரசும், ஊடகம், நாளிதழ்கள் வாயிலாக மக்கள் அச்சமின்றி பயன்படுத்தலாம் என்று உறுதி கூறினார். மட்டுமே பத்து ரூபாய் நாணயங்கள் மக்கள் பயன்பாட்டிற்கு வரும் என்று பொது மக்களின் எதிர்ப்பார்ப்பாக உள்ளது.

– ராம்குமார்

# நெருங்கும் அக்னி... சமாளிக்க முடியுமா?

கோடை காலம்துவங்கிவிட்டதற்கான அறிகுறிகள் தெரிய ஆரம்பித்துவிட்டன. குளிர் பான நிறுவனங்களும் ஐஸ்கிரீம் நிறுவனங்களும் உத்திகளை வகுக்க தொடங்கிவிட்டன. பொதுவாக கோடை காலத்தில்தான் ஐஸ்கிரீம் விற்பனை அதிகமாக நடைபெறும். விற்பனை அதிகப் படுத்துவதற்காக ஐஸ்கீரிம் நிறுவனங்களுக்கு இடையே போட்டி அதிகரிக்கும்.

ஒவ்வொரு நிறுவனமும் வாடிக் கையாளர்களை தக்கவைத்துக் கொள்ள இந்தக் காலகட்டத்தில் புதிய ஐஸ்கிரீம் வகைகளை அறிமுகப் படுத்தும். இந்த மாதமே வெயில் சுட்டெரிக்க ஆரம்பித்துவிட்டதால் ஐஸ்கிரீமுக்கான தேவை அதிகரிக்கும் என்று அமுல், மதர் டெய்ரி, ஹட்சன், பிரபாத் டெய்ரி போன்ற நிறுவனங்கள் தங்கள் உற்பத்தியை அதிகப்படுத்த திட்டமிட்டுள்ளன.

மேலும் புதிய வகைகளை அறிமுகப்படுத் தவும் நிறுவனங்கள் திட்டமிட்டு வருகின்றன. பொதுவாக வெனிலா, ஸ்ட்ராபெரி, சாக்லெட் மற்றும் மேங்கோ சுவை கொண்ட ஐஸ்கிரீம் வகைகளையே இந்தியர்கள் அதிகம் விரும்பி சாப்பிடுகின்றனர் என்று ஒரு ஆய்வு கூறுகிறது.

மேலும் இந்தியாவின் பழமையான ஐஸ்கிரீம் வகைகளான கேசர் பிஸ்தா, பிஸ்தா, குல்பி ஆகியவையும் அதிகள வில் விற்பதாக கூறப்படுகிறது. இதன் காரணமாக பழைய ஐஸ்கிரீம் வகைகளி லேயே சிறு, சிறு மாற்றங் களைச் செய்து புதிய வகைகளை அறிமுகப்படுத்த நிறுவனங்கள் திட்ட மிட்டுள்ளன.





முன்பு இருந்ததை விட இந்தியாவில் தனிநபர் ஐஸ்கிரீம் நுகர்வு அதிகரித்துள்ளதாககூறப்படுகிறது.

இந்தியாவில் கோடைக்காலத்தில் 40 சதவீதம் ஐஸ்கிரீம் விற்பனை நடைபெறுகிறது. ஆனால் மீதம் 60 சதவீத விற்பனை மற்ற



இந்தியாவில் ஆறு முக்கிய நிறுவனங்களை தவிர 8,000 சிறு ஐஸ்கிரீம் தயாரிப்பாளர்கள் உள்ளனர். அதுமட்டுமல்லாமல் பன்னாட்டு நிறுவன பிராண்டுகளும் இந்தியாவில் களமிறங்கி விட்டன. தற்போதைய தகவல்கள்படி இந்தியாவில் வருடத்திற்கு 10 கோடி டன் ஐஸ்கிரீம் உற்பத்தி செய்யப்படுகிறது.

2022-ம் ஆண்டுக்குள் ஐஸ்கிரீம் உற்பத்தியை 15 டன்னாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தற்போது வரை ஐஸ்கிரீம் துறையின் ஆண்டு வருமானம் 1.6 பில்லியன் டாலராக உள்ளது. 2021-ம் ஆண்டுக்குள் இது 3.5 பில்லியன் டாலராக உயரும் என டெக் சயின்ஸ் ஆய்வு நிறுவனம் கணித்துள்ளது.

முன்பெல்லாம் கோடைகாலம் மட்டுமே ஐஸ்கிரீம் விற்பனை நடக்கும். ஆனால் தற்போது அனைத்து பருவங்களிலும் ஐஸ்கிரீம் விற்பனை நடந்து வருகிறது. அதேபோல் இந்தியாவில் ஒரு தனிநபர் ஆண்டுக்கு 300 எம்எல் ஐஸ்கிரீம் உண்பதாக அந்த ஆய்வு கூறியுள்ளது.

இது அமெரிக்காவில் 22 லிட்டராகவும் சீனாவில் 3 லிட்டராகவும் இருந்து வருகிறது.

பருவத்தில்தான் நடக்கிறது. அதாவது குளிர்காலம் தொடங்குவதற்கு முன்பு பல்வேறு விழாக்கள், திருவிழாக்கள் நடைபெறுவதால் அந்தக் காலக்கட்டத்திலும் விற்பனை அதிகம் நடைபெறு வதாக இத்துறை வல்லுநர்கள் கூறுகின்றனர்.

ஐஸ்கிரீம் என்பது முன்பெல்லாம் வசதி படைத்தவர்களின் உணவாகக் கருதப்பட்டது. ஆனால் காலங்கள் மாற மாற வாடிக்கையாளர்கள் ஐஸ்கிரீமின் சுவைக்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்தனர். இந்தியாவில் தனிநபர் வருமானம் அதிகரித்திருப்பது, வாடிக்கையாளர்களின் ரசனை மாறியிருப்பது போன்றவற்றால் ஐஸ்கிரீம் துறை நன்கு வளர்ச்சி பெற்று வருகிறது.

**காரியம் ஆக 'ஐஸ்' வைக்கிறாயா என்பார்கள் ஆனால் அந்த ஐஸ் இன்று கோடிகளைக் குவிக்கும் தொழிலாய் வளர்கிறது.**

– குருதேவ்

# கருநிற காக்கிகள்

9

ஆ.மவுரியன்

**அது தெரிஞ்சிட்டா நம் எல்லோருடைய உயிருக்கும் அது ஆபத்தாயிடும். என்ன புரியுதா திவ்யா? என்று கேட்டுக் கொண்டிருக்கும் பொழுதே திவ்யா கௌரிக்கு போன் செய்து கொண்டிருந்தாள்.**

டிரைனேஜ் மூடி மேலே பறந்த வேகத்திற்கு டமார் என்று கீழே விழுந்தது. தமிழரசு எந்த சலனமும் இல்லாமல் திரும்பிப் பார்த்துவிட்டு தனது பைக்கை எடுத்துக்கொண்டு ஹைவே ரோட்டில் சென்று கொண்டிருந்தான். ஷாப்பிங் மாலில் திவ்யா போன் செய்தபடி கௌரி, தனது தோழிகளுடன் காபி ஷாப்பிக்கு வந்தாள். கௌரியின் வருகைக்காக முன்னதாக காத்திருந்த திவ்யா தனது மொபைலில் ராஜசேகருக்கு எஸ்.எம்.எஸ். செய்துவிட்டு செண்ட் பாக்ஸை டெலிட் செய்து முடித்தாள்.

கௌரி தனது ஹேண்ட் பேக்கை டேபிளில் வைத்துவிட்டு சர்வரை அழைத்தால், கூல் காபி, சான் வெஜ்ஜி ஆர்டர் செய்து விட்டு உட்கார்ந்தாள். திவ்யாவைப் பார்த்து உங்களுக்கு என்னவேணுமோ ஆர்டர் செய்து கொள்ளுங்கள் என்று சொன்னாள். சிறிது நேரத்தில் கௌரிக்கு எதிர்முனையில் மூன்று டேபிள் தள்ளி ராஜசேகர் வந்து உட்கார்ந்தான். உட்கார்ந்தவன் கௌரியின் அழகை வச்சக்கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். தன் பாக்கெட்டில் இருந்து ஒரு பேப்பரை எடுத்து கவிதை எழுத ஆரம்பித்தான்.

திவ்யா ராஜசேகர் சொன்னபடி தனது வேலையை செய்ய ஆரம்பித்தாள். கௌரி யாரடி அவன் உன்னையே பிசிறு தட்டாம பாத்திட்டுருக்கான் என்ன உன் பாய் பிரண்டா? என்று திவ்யா திடிரென்று கேட்டதும் கௌரி கோபத்துடன் திவ்யாவைப் முறைத்து பார்த்தாள் தோழிகள் ஆர்டர் பண்ண அயிட்டங்களை வெளுத்து வாங்கிக் கொண்டிருந் தார்கள்.

சாரி தப்பா சொல்லிட்டேன் கௌரி உன் பாய் பிரண்டுன்னு உன் லவ்வர்தான். கௌரியால் எதுவும் பேச முடியாமல் திகைத்து போனால். சர்வர் ஒருவரிடம் ராஜசேகர் ஒரு பேப்பரை கொடுத்து கௌரியை அடையாளம் காட்டி கொடுக்க சொன்னான், சர்வர் நேராக வந்து கௌரியின் முன் டேபிளில் வைத்துவிட்டு அந்த பேப்பர்மேல் கூல் காபியை வைத்தான், திவ்யா அந்த பேப்பரை எடுத்து படித்தாள்.

கௌரி ராஜசேகரையே பார்த்துக் கொண்டிருந்தாள், அப்பொழுது திவ்யா ராஜசேகர் எழுதிய கவிதைகளை மென்மையமாக படிக்க ஆரம்பித்தாள், 'எத்தனை வார்த்தைகளால் சொன்னாலும், உனக்கு புரியப்போவதில்லை உன் செவ்விதழில் ஒரே ஒரு முத்தத்தால் உணர்த்திவிடவா? என் காதலை! என்று படித்தாள். அங்கிருந்து ராஜசேகர் முத்தம் கொடுக்க சற்றும் எதிர்பார்க்காத கௌரி அதிர்ந்து போனாள்.

எத்தனை அழகென்று சொல்ல முடியா பட்டியலில் உன் விழிகளையும் சேர்த்துவிட்டேன். ஆஹா வெரி நைஸ் என்று ராஜசேகரை திரும்பிப் பார்த்து என்ன ஒரு ரசனை என்று புகழ்ந்தாள் திவ்யா, கௌரிக்கு எரிச்சல் வர ஆரம்பித்தது. மேலும் ராஜசேகர் எழுதிய கவிதைகளை வாசிக்க ஆரம்பித்தாள் திவ்யா, நீ

இமைக்கும் அழகை காண்பதற்காகவே இமைக் காமல் கிடக்கின்றன என் கண்கள்.

கௌரிக்கு ராஜசேகர்மேல் மேலும் எரிச்சலானது யாரடி இவன் என்னைப் பார்த்து இப்படி ரசித்து எழுதறான், அவன் யாருன்னு நான் அப்புறம் சொல்றேன். முதல்ல இந்த சுவிட்ட சாப்பிடு என்று அடுத்த கவிதை படித்தாள். உலக அதிசயங்கள் எல்லாம் கல்லால் ஆனவையடி? இல்லையேல் உன்னையும் சேர்த்திருப்பார்கள், வாவ் யாரையும் இப்படி எழுத முடியாது ம்....... எனக்கும் ஒரு லவ்வர் இவன மாதிரி கிடைப் பானா? அப்படி கிடைச்சா காலம்பூரா இப்படி எழுதிகிட்டே இருப்பான்.

அதே நான் படிச்சிக்கிட்டே இருப்பேன்? தோழிகளில் ஒருத்தி குறுக்கிட்டு இவன மாதிரி பசங்கயெல்லாம் பஸ்ட்டு கவிதை கொடுப்பா னுங்க, அப்புறம் கையில புல்லைய கொடுப்பா னுங்க, கடைசியா? கண்ணீரையும், கஷ்டத்தை யும் கொடுப்பானுங்க எந்த ஒரு ஆம்பளையும் காதல்னு வந்தா? மூஞ்சுக்கு நேரா வந்து குலம், கோத்ரம், பாக்காம ஆஸ்தி அந்தஸ்து பாக்காம உன்ன நான் விரும்புறேன் உங்க வீட்டுல வந்து பொண்ணு கேட்கலாமானு கேட்பான். அவந்தான் ஆம்பள, அதுதான் காதல்! கவிதை கொடுக்கிறவனையெல்லாம் கழட்டி விடுற பசங்க செய்ற வேல என்று சொன்னாள்.

தோழியின் பதிலை சற்றும் எதிர்பார்க்காத திவ்யா அலட்டிக் கொள்ளாமல் கடிகாரத்தைப் போலவே காதலும் நொடிக்கொருதரம் துடிப்ப தற்காகவாழ்கிறது! என்றுபடித்தவுடன் கௌரிக்கு ராஜசேகர்மேல் கடும் எரிச்சல் வந்து நேராக ராஜசேகரைப் பார்த்து கன்னத்தில் தனது செருப்பை கழட்டி ப்ளார் ப்ளார் என்று அடிக்க திவ்யா முதல் அங்கிருந்த அனைவரும் தனது மொபைல் போனில் படம் பிடித்து ஃபேஸ் புக், வாட்ஸ் ஆப்புக்கு அனுப்பி அப்லோடு செய்தார் கள். காதல் கவிதை சொன்ன பத்திரிகை நிருபரை தாக்கிய இளம் பெண் கௌரி தான்டவன் என்று டைப் செய்து அனுப்பிவிட்டார்கள். கௌரி நைசாக வெளியேறி விட்டாள்.

ஹைவே ஹோட்டலுக்கு ராஜசேகர் உள்ளே வந்து தனது பைக்கை நிறுத்திவிட்டு ஆர்டர் செய்தான். சர்வர் சொன்ன தகவல்களை கேட்டு அதிர்ச்சியில் உறைந்து போனான்.

சர்வரிடம் தமிழரசு ரெண்டு பரோட்டா, மட்டன் சாப்ஸ், ஒன் பிளேட், க்ரீல்டு சிக்கன் ஒரு ஃபுல், நாலு ஆப்பாயில், ஒரு நூடுல்ஸ், ஒரு வெஜ் பிரியாணி என்று ஆர்டர் செய்தான். இதெல்லாம் எடுத்துக்கிட்டு வா அதுகப்புறம் ஆர்டர் சொல்றேன் என்று சொல்ல சர்வர் அதிர்ச்சியாகி, எடுத்துவர உள்ளே சென்றான். பின்னாலே தமிழரசுவும் சென்றான்.

ஹெவி ஹோல்டேஜ் பிரிஷரில் மாதக் கணக்கில் வைத்திருந்த ஆட்டு துடைகள் ஐஸாக உரைந்து கிடந்தது, அதை வெட்டி பாயல் பண்ண அனுப்பினான். ஒரு வேலையாய் அந்த மாமிசத்தை வெட்டும்போது குடலை பிடுங்கும் துர்நாற்றம் வீசியது. உறிக்கப்பட்ட முழு கோழிகள் ஐஸில் உறைந்து கிடந்ததை எடுத்து மசாலா தடவி கிரிலுக்கு அனுப்பிக் கொண்டிருந் தார்கள். ஒரு மூலையில் கொட்டிக் கிடந்த காய்கறிகள் அழுகி, புழு மேய்ந்து கொண்டி ருந்தது. அந்த காய்கறிகளை எடுத்து தண்ணீரில் கூட அலசாமல் அப்படியே வெட்டி ப்ரைடு ரைசுக்கு அனுப்பினான் ஒருவன்.

பல வருடம் கழுவாமல் இருக்கும் நீர் தொட்டியில் இருந்து சமையல் அறைக்கு குழாயில் தண்ணீர் வந்து ஒரு பெரிய பாத்திரத் தில் நிரம்பிக் கொண்டிருந்தது. அந்த தண்ணீர் பாசி நிறத்தில் இருந்தது. சமையல் செய்யும் வேலையாட்கள் அனைவரும் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த வயதானவர்களாக இருந்தார்கள்.

ஒருவன் ஒரு எண்ணை டின்னில் இருந்து பொறிப்பதற்கு பாத்திரத்தில் எண்ணையை ஊற்றினான். அது குருடாயில் நிறத்தில் இருந்தது. அதில் புழு வந்து விழுந்தது, தமிழரசுக்கு அதிர்ச்சி யாகிவிட்டது. மூக்கை பிடித்துக் கொண்டு வெளியே வர நினைக்கும்போது ஒருவன் பார்ப் பதற்கு அந்த கடை முதலாளிபோல் இருந்தான் தடித்த உருவம், கழுத்து நிறைய தங்க செயின் களை சைக்கிள் செயின் அளவிற்கு போட்டி ருந்தான், உள்ளே இருந்த தமிழரசுவை பார்த்து கடுங் கோபத்தில் திட்டி வெளியே போகச் சொன்னான், தமிழரசு கோபத்தை அடக்கிக் கொண்டு தன் டேபிளில் வந்து உக்காந்தான்.

மற்ற டேபிளில் உக்காந்து சாப்பிடுபவர்கள் மீது தன் பார்வையை சுழட்டினான். அவர்கள் என்ன ஒரு டேஸ்ட் இந்த ஓட்டல் மாதிரி இந்த ஏரியாவிலேயே ஒரு ஓட்டல் இல்ல என்று சொல்ல தமிழரசு தலையில் அடித்துக் கொண் டான். சிறு குழந்தைகள் எல்லாம் விரும்பி சாப்பிட் டுக் கொண்டிருந்ததைப் பார்த்து கடுங்கோபம் கொண்டான் தமிழரசு.

- தொடரும்

# நீர் நிறையா குளம்...

வாழ்வதற்கு பொருள் வேண்டும்
வாழ்வதிலும் பொருள் வேண்டும்
ஆமாம்
வாழத்தான் வேண்டும் ...

வாழ்ந்து பார்
அத்தனையும் விடை
தெரியாத கணக்கு
இலக்கை நோக்கி ஓடு
ஓடுவதிலும் இலக்கு? ...

கொடுவாளைப்போல்
மனதைக் கொத்தும் உறவுகள்...
உறங்கவிடாமல் ஆந்தையாய்
அலறும் அடுத்தநாள்
சிந்தனைகள்...
நினைவெல்லம் ஏமாற்றத்தையே
சந்திக்கும் தருணங்கள்...

துரத்தும் துயரங்கள்
தூள் துளாகும் கனவுகள்...
வாண்வெளியில் கூட
மேகம் திறண்டு
ஒருநாள் குளிர்ந்து விடுகிறது...

பாவப்பட்ட மனிதப்பிறப்பில்
மட்டும் எத்தனை முரண்கள் ...
விடியாத வசந்தம்
மலராத அரும்புகளாய்
காலமும் முடிந்துபோகும் ...

நித்தம்படும் துயரத்தில்
கண்கள் நிறைந்து
வழியாமல் நீர்
நிறையா குளமாக
உள்ளுக்குள்ளே
வறண்டே கிடக்கிறது
இன்னமும்...



– கவிஞர் நிவேதிதா

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from 3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078. Printed by : S.Ali Mohammad Syeed, at J.M.Process, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor. A. Mouriyan.






தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கத்தின் 2-வது மாநில மாநாட்டில் முன் வைக்கப்பட்ட 10 அம்ச கோரிக்கைகளை 02-04-2017 அன்று சென்னை, வடபழனியில் நடைபெற்ற மாநில பொதுக்குழுவில் மாநில, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் முன்னிலையிலும் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாநில பொதுச் செயலாளர் ஆ. மவுரியன் எழுதிய 'காலப்பிழை' கவிதை நூலை மாநில தலைவர் காசி. அரங்கநாதன் வெளியிட மாநில துணை தலைவர் வி. அருணாசலம் பெற்றுக்கொண்டார். உடன் மாநில பொருளாளர் அ. காதர் மொய்தீன், மாநில ஒருங்கிணைப்பாளர் ஏ.எஸ்.பஷீர் அகமது, மாநில துணை தலைவர்கள் த. துரைபாபு, பாபுதேவசங்கர், மாநில நிர்வாகிகள் மற்றும் கல்வி டுடே ஆசிரியர் எஸ். ராமசுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

MAKKAL VISARANAI Tamil Monthly Regd. No. TN/CC(S) DN/461/16-18
Registered with Registrar of News Paper for India Under No. TNTAM 44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month

